KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலா நிலயம்.

V8. No. 6. 7. 2. 1935.

m211, N28KN

N35-8.6.

199204

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0

புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

கலாநிலயம் :—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol. 8] 1935 ஹு பிப்ரவரி மீ 7 உ [No. 6

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 81

2. சூளாமணி (இரதநூபுரச் சருக்கம்)
வித்துவான்
T. P. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை M.A.,B.L. 83

3. அணியிலக்கணம் (பாவிக அணி) 84

4. சூரியன் - (பகலவன் உருவம்)
E. T. இராஜேஸ்வரி அம்மாள் M.A., L.T. 87

5. நம்மாழ்வார் வைபவம் (7-ம் பத்து, 3-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.,B.L. 89

6. ஒத்தெல்லோ (அங்கம் 1. களம் 3.)
Shakespeare's—"Othello" 90

7. வில்லிபாரதம்—(துரியோதனன்)
K. T. விஜயராகவாச்சாரியார் B.A. 93

8. வர்த்தமானம் 96

கலாநிலயம்

கடவுட் சித்தம் 3.

வாழும்வகையோ ஒன்றேதான் இருக்கின்றது. அது தான் கடவுளின்சித்தத்தை முயன்றறிந்து இவ்வுலகத்தில் நடத்திவைப்பதாம். அச்சித்தத்தை அறிவதற்குச் செய்யும் முயற்சிக்கு இடையூறு யிருப்பது, மனிதர் தம்முடைய காரியங்களைக் கடவுளின்காரியமாகக்கருதிமயங்குகின்ற வொரு பெரும்மயக்கமே. ஏனெனில், இவ்வாறு மயங்குவதனால், நம்முடைய காரியங்களை இயக்குகின்ற எண்ணங்களைப்போன்றே கடவுளின் எண்ணங்களும் அமைந்து நடபெறுகின்றன எனத் தவறாக மதிக்கப்புகுகின்றவராகின்றோம். எனினும், தவறுகளெல்லாம் தீமைக்கு ஆதாரமாகிய குற்றங்களும் ஆகவேண்டும் என்னும் நியதி யில்லை. எனின், நம்முடைய எண்ணங்கள் போன்றே கடவுளின் எண்ணங்களும் இருக்கின்றன வென்று மதிப்பது தவறே எனக்கொண்டாலும் அதனில் அமைந்துள்ள குற்றம் யாதென்று சிலர் ஐயுறலாம். மற்று, இந்தத்தவறே குற்றமும்ஆகின்றது. அக்குற்றத்தின் தன்மையை ஆராய்ந்து உணர்ந்துகொள்வது நலம் இவ்வாராய்ச்சியிடையே சிற்சில கருத்துக்கள் வெளியாகி அக்குற்றத்தின் உண்மைத்தன்மையைத் தெரிவிப்பனபோல் தென்படும். கடவுளுடைய எண்ணங்கள் நம்முடைய எண்ணங்கள் போன்றே இருக்கின்றனவா மென்றுநினைப்பதால், கடவுளை நம்முடைய நிலைமைக்கே இழித்துக்கொண்டதாகிய வொரு குற்றம் விளைகின்றதால், இதுதான் இதன்குற்றம் என மேற்பு[illegible]நினும், ஆழ்ந்துநோக்குமிடத்து, அன்னவாறு இழித்தல் இயற்கையுமன்று இயலவும் இயலாது என்பது புலப்படும். அவ்வாறே, அதற்கெதிர், நம்மைக் கடவுளின்நிலைக்கு உயர்த்திக் கொண்டதாய் முடிகின்ற குற்றமோ விது என்று சிந்திக்குமளவில், இதுவும் இயற்கையற்றும் இயலாமலும் நிற்பதுடன், குற்றமுமே ஆகாமையும் அறியப்படும்—இது முன்னிரண்டு கட்டுரைகளில் அடங்கியவைகளின் பிண்டப்பொருள். மேல்வருவனவற்றைத் தொடர்வதற்கு இத் தொகுத்துரை உதவிசெய்யும். இனி, நம்முடைய காரியத்தைக் கடவுட்காரியமாக மயங்கி, அதனால், அவருடையசித்தமும் நம்முடைய சித்தம்போன்றே விவகரிக்கின்றது என்று பிழைபட மதிப்பதில் அடங்கிய குற்றந்தான் யாது என்பதைச் சிறிது ஆராய்வோம்.

மானுடப் பொதுநடமாட்டங்களும், மனிதர்களில் அவரவர்களுடைய தனிக்காரியங்களும் இப்போது இவ்வுலகில் நடைபெறுவதைக்காட்டிலும் செம்மையாக நடைபெற இயலாது என்னுமொரு உட்கருத்துடன் விவகரிப்பது தீமைகள்விளைக்கும் குற்றமாம் என்பதை உணர்ந்துகொள்ள முயல்வோமாயின்பின் நம் வாழ்க்கைவகையினைச் சார்ந்தசெய்திகள் அனைத்தும் மெல்லமெல்லத் தெளிவடைந்துவிடும். எனின், இப்பொழுதிங்கு இருப்பதைக்காட்டிலும் செம்மையான நிலையொன்று இருக்க இயலவும் இயலும், அதனையே அடைதலும்வேண்டும்என்னுஞ்சிந்தனைநம்முடைய வாழ்க்கையனைத்தையும் ஊடுருவித் தொடர்வ

தற்கு இடையூருக விளைவனவெல்லாம் கொடிய குற்றங்களாகவேகொள்ளப்படுதல்வேண்டும். கடவுளின் காரியங்களை நம்முடையகாரியங்களாக மயங்கி, அதனின்று அவருடைய சித்தமும் நம்முடைய சித்தம் போன்றே இருக்கின்றதென்று மதித்துவிவகரிப்பது, இத்தகைய இடையூருகி நிற்பதனுற்ருன், அதனைக் குற்றமாகக்கருதவேண்டுமென்று இங்கு வற்புறுத்துகின்ருேம். இவ்விடையூற்றின் தன்மையையும் எதற்கிது இடையூறு இயற்றுகின்றதென்பதையும் சிறிது ஊன்றிநோக்குதல் இக்கட்டுரையின்பொருளை உணர்வதற்கு உதவியாயிருக்கும்.

அண்டகோடிகளும் அவைகளில் உள்ள சராசரங்களும் நிகிலத்தோற்றங்கள் அனைத்துமே ஒருபெருங்கனவேயென்றும், கண்ணுடியுள் தெரிகின்ற நிழலேபோன்றதென்றும் செப்புவார் சிந்தனையாளர் சிலர். நிழலென்ருல், பொருள் ஆகிய ஒன்று வேறு இருத்தல்வேண்டும்; கனவென்ருல், கனக் காண்கின்றவன் ஒருவன் வேறு இருத்தல்வேண்டும். நனவில் விளைந்த எண்ணங்களே கனவில் உருப்பெற்று நிகழ்கின்றன. ஒருவனது எண்ணங்கள் கனவெனும் உருவுகொண்டு நிகழுங்கால், அது புறத்திலேயுந்தோன்றுவதுபோல் தென்படுமாயின், அக்காட்சியானது, கனவெனத்தகுவதோடுநிற்காமல், கனவின்நிழலெனநினைத்தற்கொத்ததாய்த் தீர்கின்றது. ஸ்தூலப் பிரபஞ்சம் பொய்யேயென்று வாதிப்போர் வழக்குநெறி இத்தகையதே. இவ்வாதத்தினை ஆராய்கின்ற அவசியம் இங்கு எழவில்லை. இவ்வாதத்தின் நேர்மையும் சீர்மையும் எதுவாயினும், இதற் கடிப்படையாயிருக்கின்ற மானுட மனத்தினரியதொருசிறுஇரகசியத்தை உணர்ந்தாற் போதும்.

ஸ்தூலப்பொருள்கள் என்று நமது பொறிகளுக்குத்தோன்றுவன அனைத்தும், உண்மையில் பொருள்களல்லவென்றும், பிரபஞ்சமடங்கலும் வியாபித்து இருக்கின்றவொரேசக்திதான் பல்வகைப் பொருள்களாக நம்மால் பாவிக்கப்படுகின்றனவென்றும் தற்கால பூததத்துவ ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். அந்தச்சக்தியானது சுழல்கின்றவேகத்தின் வேற்றுமையே பொருள்களின் வேற்றுமையாகத் தென்படுகின்றதென்பதும் அவர்கொள்கை. எனினும், இந்தச் சக்தி எங்கிருந்து வந்தது என்பதேனும், எதற்காகச் சுழன்றுகொண்டிருக்கின்றதென்பதேனும் அவர்தம் ஆராய்ச்சியுள் அடங்கக்கூடிய விடயங்களல்லவென்பதை அவர்களே ஒப்புக்கொண்டு மானுட அறிவின் எல்லையை மறக்காமலிருக்கிற இந்தச்செம்மை அவர்களுக்குப் பெருமை யளிக்கின்றது. அப்படியே தற்கால உயிர்நூல் வல்லவர்களும், இவ்வுயிரிற்கு இடமாகிய உடல்களின் அமைப்பு வளர்ச்சி மாறுதல்கள் முதலியவைகளை ஆராய்ந்து, புல்பூண்டு புழு பறவை விலங்கு மனிதர் அனைய எண்ணில் பல்கோடி ஜீவராசிகளின் ஒற்றுமை வேற்றுமைகளை உணர்த்தி, உயிரினுல் இயக்கப்படும் உடலங்களையும் அவை ஒன்றற்கொன்று மாறுபட்டு வளர்கின்ற தொடர்ச்சியையும் ஒருவாறு முறைப்படுத்திக்கூறுகின்ருர்களே யன்றி, அவ் வுயிர்என்னும் அது அந்தத்தில் யாதென்பதோ தம் ஆராய்ச்சிக்கு எட்டாததொன்றே என்பதையும் ஏற்றுக்கொள்கின்றனர். இன்னவாறு அணுக்களின் திரள் இவ்வண்டம் என்னற்கும் அடியாக, சக்தியின் சுழற்சியே அணுக்கள் எனத் துவக்கவேண்டியிருப்பதும், உயரின் இயக்கம் யாதென்ன உணரப்படாமையும் ஒருபுறம் இருக்க, தத்துவத்துறைபுக் களாவிய தக்கோர் சிலர், ஆன்மாவென்ற ஒன்றையும் இப் பிரபஞ்ச அமைப்பினிற்குள் அழைத்துக்கொண்டு, மற்று, அவ்வான்மா, உடலேனும் உயிரேனும் இவையனைய பிறவேனும் அல்லாமையையே வற்புறுத்தக்கூடியவர்களாக முடிகின்றவர்கள் ஆகிருர்களே யன்றி, அதன்மேல் உடன்படமாட்டாமல், பண்டேபோல் இன்றளவும் வேறுயாது சாதித்தனர் பிரபஞ்சப் பொருள்ளும் உடல்களினமைப்பும் உயிரின் இயக்கமும் ஆன்மாவின் தன்மையும் இவ்வாருக இதன் தலை, மெய்வளரும் நெஞ்சினர்களாகிய வித்தகர் காட்சியாம் கடவுளும் உளர் ஒருவர். அந்தக் கடவுளையோ கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர், என்னவே எல்லா ஆராய்ச்சிகளும் முடியவேண்டியது கடனுகின்றது.

இத்தகையதோர் இயல்பினதாகிய பிரபஞ்சத்தில் அக்கடவுளின்சித்தத்தை அறிந்துநடத்திவைப்பதே மனிதர் வாழ்வாங்குவாழ்வல்ல வாழ்க்கையாம் என்பதை நினைக்குங்கால் அவ்வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முயல்கின்ற முயற்சியின் அருமை தெள்ளிதின் புலப்படும். ஆயினும், இத்தகைய தத்துவவிடயங்களின் அருமையை அறிந்துகொள்வதில் பெரியதொரு அதிசயம் இருக்கின்றது. ஒன்றினை நாம் கருதித் துணிதல்அரியதாமென்பதைக் கற்றுக்கொண்ட அக்கணமே அது உணர்ந்து உவத்தற்கு எளியதாகிவிடும். அறிவானது உணர்வினிற்குச் செய்யும்உபகாரம் இவ்வகைத்தே. கல்லாத உணர்வினர் கலங்குவார்; மற்று, அதனைக்கற்றவர், உணர்வினது ஊக்கம் மிகுந்தவர்களாகி அவ்வூக்கத்தின் அமைதியைப் பெற்றுக்கொள்கிருர். வேண்டப்படுவதெல்லாம் அவ்வளவே. "கற்றனைத்து ஊறும் அறிவு" என்றும் "அறிதோறும் அறியாமை கண்டற்று" என்று மிருவேறிடங்களில் எடுத்துக்காட்டியுள திருவள்ளுவர், கல்வியால் விளையும் அறிவெல்லாம் அந்தத்தில் அறியாமையை அறிகின்ற ஆற்றலே என்றும், அதுதான் கல்வியின் பயன் என்றும், அப்பயன்தான் வாலறிவன் நற்றாள் தொழுதலாம் என்றும் இணைத்த திறமையிற்ருன் தம் தெய்வப்புலமையை அனைத்திலும் அதிகமாகக் காட்டிநிற்கின்ருர் என்பதில் ஐயம் பெரிதில்லை என்னல்வேண்டும்§.

இன்னபடி அறிவானது "யானென்றும்அறியவல்லேன் அல்லேன்" என்ன ஒரு கும்பிடுபோட்டுவிட்டு அகன்றபின்னரே, இதுகாறும் அவ்வறிவினை நம்பியிருந்த நம் உணர்வானது, தன்னுடைய தூண்டல்கள் மெய்யோ பொய்யோ என்னுந் துணிவின்மையாலமர்ந்து தயங்கியிருந்தஅச்சம் நீங்கித் தன்னுடைய தன்மையில் தானே உறுதிபெற்றதாகின்றது. அந்நிலை வாய்த்தபின் அப்புறம் அபாயம் என்பது எங்குமில்லை. உயிர் ஆன்மா கடவுள் எல்லாம்அதன்பின் நமது வாழ்க்கையில் தத்தமக்குரியஇடங்களைச்செவ்விதின் பெற்றுஅமைந்துவிடும். அறியாமையைஅறிந்த அறிவினிலிருந்து விளைகின்ற இவ்வுணர்வுநிலையை மாரிஸ் மாடர்லிங்க் என்பவர், "The enchantment of the disenchanted" என்று அழைக்கின்ருர்.

இந்த மெய்ம்மையை மனத்திற்கொண்டு நாம் மீண்டும் இக்கட்டுரை மேற்கொண்டிருக்கின்றபொருளின்பாற் செல்லுவோமெனின், உணர்வின் உதவியினுல் வெளிப்பட நிற்கின்ற விந்தை தெளியப்பெற்றவர்களாவோம். வாழ்க்கையின் மெய்ம்மை வேறு கிடக்க, அதனைவிட்டு, அம்மெய்ம்மையின் நிழலாகிய தோற்றங்களாம் உண்மையைத் தழுவித்தழுவி இளைத்துப்போன அறிவானது அகன்றபின், உணர்விற்கு உரியதாகிய மெய்ம்மையே உதிக்குமாதலின், உண்மையாக நிகழ்கிற இந் நடமாட்டங்களெல்லாம் நிரந்தரமான ஒரு மெய்ம்மை நிலையை அடைந்து அன்னதே தாம் ஆவதற்கு முயல்கின்ற ஒரு இடைவிடா முயற்சியின் தோற்றங்களே என்பது தென்படும். நம் உணர்வின் முதிர்ச்சியால் அத்தோற்றம் தென்பட்டநாள்முதல் அவரவர் வாழ்கின்ற வாழ்க்கைக்கும் அவ்வாழ்க்கையில் செய்கின்ற காரியங்களுக்கும் மேலான வாழ்க்கையும் செய்கைகளும், வாழ்வதற்கும் செய்வதற்கும் இருக்கின்றன என்னும் ஒரு நம்பிக்கை எஞ்ஞான்றும் நமது உள்ளத்தில் வளர்ந்துகொண்டிருக்கின்ற புண்ணியத்தவர்களாவோம். கடவுளின் காரியங்கள் நம்முடைய காரியங்கள் போன்றே நடைபெறுகின்றன என்று எண்ணிவிட்டால், அப்புறம் இந்த நம்பிக்கை உதிப்பதற்கு ஆதாரமில்லை, வளர்வதற்கு இடமும் இல்லை. அவரவர் வாழும் வகைக்கு மேலானவொரு வாழ்க்கை உளதென்னும் ஊக்கமே, கடவுளின்சித்தத்தைத் தேடிச்செல்லும் வழியில் நமக்குக் கைகாட்டிமரம்போல் நின்று உதவுகின்றது.

---

§ அறிவெனப்படுவதெல்லாம் அறியாமையே என்னும் இம்முரண்போல் தோன்றுகின்ற கருத்தின் அமைதியும், அதனை உணர்ந்துகொள்வதன் நன்மையும் "அறியாமை வேண்டப்படும்" என்னுந்தலையங்கத்தில் விளக்கப்பெற்றிருக்கின்றன.—வால்யூம் [illegible] 5.

சூளாமணி

இரதநூபுரச் சருக்கம்

[75-வது பக்கத் தொடர்ச்சி]

73. இவர்கள் இவ்வாறு இறைவனை ஏத்துகின்றனர். "தவஞ்செய்வார் அன்ருே தங் கருமஞ் செய்வார்". கடவுளை வழிபடுதலையே தமது தொழிலாகக் கொண்ட இப்பெரியோர்கள், அத்தொழிலை அன்னவாறு குறைவின்றிச் செய்துமுடிக்கின்றனர்; அந்நிலையிலே, குணக்குன்றெனப் பொலிந்து காட்சிகொடுக்கின்றனர். அருள்வழியே அறிவாட்சி செலுத்துமம் மன்னனும் செந்தண்மை பூண்டொழுகும் இவ்வாறிய அறவோர்எதிரே சிறிய மறவோனுகவே விளங்குகின்ருன். அன்னோர் அவனைக்காண்கின்றனர். அவனுடைய வினைக்கோடை யொழிய அறவுரைகளாம் அன்புமழையைப் பொழியவேண்டும் என அடக்க முடியாத ஓரார்வம் அவர்களுக்குப் பிறக்கின்றது. மரம் பழுத்தால் வௌவாலை வாவென் றிரந்தழைப்பார் யாவரும் இங்கில்லை: குணக்குன்ருயினுர், கற்ருர்போல் கறவாதளிப்பரன்ருே? அதனுலேயே உலகத்தவர்க்கு இவ்வாறு உற்ருராகி உதவுகின்றனர் இன்னோர்.

74. வழிபடற் கேற்ற காலம் நேரிட்டவாறேபோலத் தக்கதோர் இடமும் அன்ருே நேரிட்டது. தண்ணெனக் குளிர்ந்த அசோக மரம் இளமையே வடிவாக விளங்குகிறது; தென்றற்காற்று அங்கேயே குடிகொண்டு வாழ்கின்றது என்னலாம். விழுமிய தேன்துளிமழையும் பனிமாரிபோல இடையருது பொழிந்துகொண்டே ஆங்கே நிலைநிற்கிறது. இளமையுந் தண்மையும் தென்றலும் தேன்மாரியும் நிலைபெற்ற இடத்தைக் கண்டதும் ஒளியும் நிலைபேறு பெற்று ஆங்கே ஒளிர்கிறது. இதனையே நிலாக்கல் வட்டம் என்பர். அப்பெரியோர்கள் சென்று இதன்மீ தமர்கின்றனர். ஒளிக்கும்ஒளியூட்டினுற்போல அவ்வட்டமுந் திகழ்கின்றது.

75. வினையின் ருெக்கையை வென்ருனுகிய அருகப் பெருமானின் திருக்கோயிலின் திருமுன்புஅமைந்த அந் நிலாக்கல்வட்டத்தே அம்முனிவர்கள் அமர்ந்தவுடனே, மின்னொளி எங்கும் நவழுநின்று. காணுர் கண்ணினும் காட்சிதந் தொளிரும் வேலேந்திப் பல துறைகளிலும் தான்பெற்றவெற்றியே ஒருருவுபெற்ருற்போலத் திகழ்கின்ற அவ்வேந்தன், பொருளொடு புகன்று அருளொடுநீங்கி வென்றவன் வழிநின்ற வென்றியாளராம் அம்முனிவர்முன் சென்றுவணங்கி அவர் திருந்தடி திருமுடியிற் றீட்டுகிருன். வென்றி வேந்தனது திருமுடியும் மிக்கொளிர்வது இத்தகைய வென்றியாளர் திருவடிக் கீழேயாம்.

76. அரசனை வாழ்த்துகின்றனர் அம்முனிவர்கள். வாழ்த்துகின்ற அந்நிலையிலே அவனுடையவாழ்க்கை அன்னவர்கள் கண்ணெதிர் தோன்றுகிறது. "உண்டி முதற்றே உடலின் பிண்டம்". இவ்வுண்டியோ, நம் வயல்கள் நமக் குதவும் அமுதமாகும் பச்சைப் பசுநெற் பரப்பாகச் செழித்து வளர்ந்து சீர்வளத்தை விளக்கி நிற்கின்ற வயல்கள்நிறைந்த நாட்டிலே அவன் திகழ்கின்றமையை இவர் காண்கின்றனர். இஃதொரு வாழ்த்தே யன்ருே. "வரப்புயர" என்று வாழ்த்திய அவ்வையார் மனத்தகத்தே கொண்ட அத்துணைக் கருத்தையும் உயிர் ஓவியமாக இவர்கள் மனக்கண் கொண்டு காண்கின்றனர். அவர்கள் "இருக்க" என்றலும் இருக்கின்ருன். இயற்கையழகோடு உடையழகும் மணிமேகலையழகும் கொண்டு விளங்கும் மகளிர் சூழ இருக்கின்றனர். மகளிரிடை விளங்கியும் பெண்வழிச்சேறல் என்னும் பெரும்பழிக் காளாகாது நிலைபெற்றுவிளங்குகின்ருன் இவ்வரசன்.

77. "அறம்வழி வந்த பொருளின் வழியே நீண்டதொரு தாமரைமலர்மீது வீற்றிருக்குந் திருப்பிராட்டி நிலையாகநின்று நிலவும் இத்தோள்கள், அறம்வழி வந்துள இன்பத்தின்வழியே திங்களேபோலத் தண்ணிலவு பொழிந்து நீண்டு தொங்கி அழகுவடிவான முத்துமாலை ஒளிரும் இத்தோள்கள், அவ் வறவழி

199204

தவருது செவ்வியனவாக விளங்குகின்றனவோ'' என வினவுகின்றார் செம்பொருள் கண்டு செந்நெறி நின்ற திருமுனிவர்கள். சூழொளி வீசும் வாளேந்திய மன்னவர்பெருமான் வணங்குகின்றான்; மணிகள் மிளிர்கின்றன. அவ்வளவு அருள்கூர்ந்து அவர்கள் தன்னை வினவியது கேட்டு அவர்களை வாழ்த்துகின்றான் அரசன். வேலொடு மன்னனை மிக வணக்கினர் முன்னே தேவர்; வாளொடுமன்னனை வணக்குகின்றார் இங்கே.

78. அம்முனிவர் இருவருட் பெரியராய் நின்றவருடைய திருமுகத்தை நோக்குகின்றான் மன்னவன். "இனியதொரு பொருள் உள்ளது; அஃது அடிகளே உணர்த்தற்பாலது'' என்னத் தெரிவித்துக்கொள்கின்றான். தண்ணிய தாமரை மலர்கள் வயலின் ஓரங்களிலும் மலர்ந்து தோன்றும் அத்தகைய நிலத்தழகும் நீர்வளமும் பொருந்திய நாட்டில் வாழும் அம்மன்னவன் மனமும் கனிகின்றது. சிறிய மன்னவனும் ஆறிய அரசன் ஆகின்றான். இம்மாறுதல் எதனாலாயது? அவர் கூறிய சொற்களாலேயே யாம்; அதனை விளக்க முடியுமோ! சொல்லையும் மனத்தையும் கடந்து நின்ற அம்முனிவர் அவ்வகையிலே கடவுளேயாதலின், அந்நுட்பத்தை எவ்வாறு விளக்குவது?

79. அவர் திருவாய் மலர்கின்றதுதான் ஏதோ? கேண்மின்! "மன்னவனே! மக்களை நெருக்கி வாட்டுகின்ற வினைஎனும் பகையினை வெட்டியெறியும் இன்னுரையாம் வாளும் வேலும் வேண்டினையோ! அவை வாளும் வேலும் ஆவதுடன் இன்னமுதமு மாகித் திகழ்கின்றன. பிறபகை வென்றதுபோல இப்பகையையும் வெல்ல இதன்மீது மறமலிந்து வாளும் வேலும் ஏற்க முந்தும் வேந்தே, ஈதே உன் கருத்துப்போலும்'' என்ற மனதினை யறிந்து கூறுகின்றார். "நம் மனதினையறிந்த கடவுளே நம்மெதிர் தோன்றுகின்றது'' என்ன எண்ணியவனாய் மின்னிப் பொலிகின்ற மிகப்பெரிய மணிகளழுத்திய தோள்வளை யணிந்த கையை விரைந்தெடுத்துத் தலைமீ திருத்தி வணங்குகின்றான். இயல்பாய் எழுகின்ற வணக்கம் ஈதேயாம். தோள்வளையும் வணங்குகின்றதே என்கிறார் தேவர்.

அணியிலக்கணம்

பாவிக அணி

[71-வது பக்கத் தொடர்ச்சி]

இதுகாறும் பாவிக அணிக்குக் கூறிவந்த இலக்கணம் 'தண்டி அலங்காரம்' என்னும் நூலினுள் கண்டிருக்கின்றபடியேயாம். இதன் மூதனூலாகிய வடமொழி, 'காவ்யாதர்சம்' என்னும் நூலில் காண்கிற இலக்கணமும் அன்னதே. வீரசோழியமும், இலக்கண விளக்கமும் தண்டியலங்காரத்திற் கண்ட இலக்கணத்தையே இந்த அணிக்குக் கூறுகின்றனபோலத் தோன்றுகின்றன. ஆயினும்ஒன்று: ஒருகாவியத்தின் பண்பாக அமைவது பாவிகஅணி யென்றும், அவ்வணிக்குஆதாரமாகஉள்ள பண்புகள் எவையென்றும், அவைகளின் தன்மை என்னவென்றும், இங்குமுன் கூறப்பட்டிருப்பவை, அக் 'காவ்யாதர்சம்' என்னும் நூலினது உரையில் குறிக்கப்பட் டிருக்கின்றவைகளைக் கொண்டுதிரட்டித் தொடர்புபடுத்திக் காட்டிய இலக்கணமாம். மற்று, தண்டியலங்காரத்தைத் தழுவிக்கொண்டுள்ள இவ்விரண்டு தமிழ் இலக்கணநூல்கள், பாவிக அணிக்கு அமையக்கண்ட இலக்கணம் இன்னதே என்பது நிச்சயமில்லை. வைத்தியநாததேசிகர் இயற்றிய இலக்கணவிளக்கத்தில் இவ்வணியின் இலக்கணம் பின்வருமாறு காணப்படுகின்றது.

> பாவிக மென்பது காப்பியப் பண்பே.

இ-ள்: பாவிகமென்று சொல்லப்படுவது பொருட்டொடர்நிலைச் செய்யுட்டிறத்துக் கவியாற் கருதிச் செய்யப்படுவதோர் குணமாம்.

அஃதாவது அத்தொடர்நிலைச் செய்யுள் முழுவதும் நோக்கிக் கொள்ளப்படுவது.

வரலாறு:—"பிறனில் விழைவோர் கிளையொடுங் கெடுப—பொறையிற் சிறந்த கவசமில்லை—வாய்மையிற் கடியதோர் வாளி யில்லை'' எனவரும். இதனுள் என்பன போல்வன தோன்றக் கிடந்தவாறு காண்க.

பாவிகம் என்பது காப்பியத்தின் பண்பு என்பது சூத்திரத்தினின்றும், அப்பண்பு என்பது குணம் என்று பொருள்படுகின்றதென்று உரையினின்றும் தெரிவதற்குமேல் இவ்வணியின் இலக்கணம் விளக்கப் படவில்லை. வரலாருகக் கூறப்பட்டிருக்கின்ற அந்நான்கு வாக்கியங்களை நோக்குங்கால், விழுமிய பொருள்கள் மிக எளியவகையில் விளக்கப்பெற்றிருக்க வேண்டும் என்பதைமட்டுமே இவ்வாசிரியர் காப்பியப் பண்பாகக் கொண்டார்போலும் என்று ஐயுறுவதற்கு இடம் ஏற்படுகின்றது.

வீரசொழியம், "பாவிகமது நற்கவியின் ஒண்பொருளின்றொடர் காப்பிய முற்றினும் உரைபெறும்'' என இலக்கணங்கூறி, அதனை, "முழுக்காப்பியமும் ஒருங்குபொருந்திய குணமாம்'' என்று உரையினில் விளக்கும். இதன்படி, "ஒரு நற்கவி தான் பாடுவதற்காக ஏற்றுக் கொண்டிருக்கிற சிறந்த பொருளானது ஒருங்கு பொருந்திக் காப்பியம் முற்றிலும் தொடர்ந்துவரும் குணமே பாவிக அணியாம்'' என்று இந்த நூல் இலக்கணம் வகுக்கின்றது போலும் என்னக் கருதலாம். அவ்வாருயின், 'நூலில்செப்பப்படுகின்ற எல்லா விடயங்களும் ஒன்றற்கொன்றுஉபகாரமாம்படி தொடர்புடன் நிற்றல்வேண்டும்' என்று நாம் கூறிய அவ்வொன்றினைமட்டும் இந்நூல் பாவிக அணியாய்க் கொள்வதாகலாம்.

'மாறன் அலங்காரத்தை'க் காணுங்கால், இவ்வணியின் இலக்கணம் யாதென்னும்ஐயம் பின்னும் அதிகமாகின்றது. அந்நூலிற்காணப்படும் இலக்கணம்பின்வருமாறு:—

> விளம்பிய காப்பியக் குணங்கள் பாவிகமே.

இ-ள்: விளம்பிய காப்பியக் குணங்கள் என்பது முன்னர்ப் பொதுவியலுட் கூறிய காப்பியக் குணங்கள்.

குணமாவன: அப் பொருட்டொடர்நிலை முழுவதூஉம் நோக்கிக் கொள்ளப்படுவ தல்லது தனித்தொரு பாட்டாற் கொள்ளப்படாதெனக் கொள்க. அவற்றுட் சில வருமாறு:—

> கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
> நற்றா டொழாஅ ரெனின்.

> சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
> வறக்குமேல் வானோர்க்கு மீண்டு

(என்பனபோல் ஐம்பத்தேழு குறள்களை எடுத்துக் காட்டி இறுதியில்) "என்பனவும் இவைபோல்வனவுமாகிய பொருட்பால் காமத்துப்பால்களுள் வருங் குணங்களும், பிற காப்பியங்களுள் வருங் குணங்களும் காப்பியக் குணங்களாமென்று கொள்க.''

இதனின்று என்ன தெரிந்துகொள்வதென்பது தெரியவில்லை. "குணமாவன காப்பியத்துள் வருங் குணங்களாம்'' என்று இம்மாறனலங்காரத்தோடு பிற இலக்கணநூல்களும் கூறுவது, "குற்றியலுகரமாவது குற்றியலுகரமாம்'' என்று இயம்புவதையே பெரும்பாலும் ஒக்கும். அதுவுமன்றி, இந்த மாறன்அலங்காரத்திற்கு ஒரு சிறப்பிருக்கின்றது. "விளம்பிய காப்பியக் குணங்கள் என்பது முன்னர்ப் பொதுவியலுட் கூறிய காப்பியக் குணங்கள்'' என்றனர்; அப் பொதுவியலுள் நோக்குங்கால், அங்குக் காப்பியத்தைப்பற்றிச் செப்பியிருப்பது பின்வருமாறு:—

> "சொல்லுவான்உட்கொண்ட பெருங் காப்பியத்தின் **இலக்கணம்** உலகம் மதிக்கப்பட்ட வாழ்த்தியலும் அவையடக் கியலும் தெய்வ வணக்கமும் செயப்படு பொருளும் என்னும் நான்கும் பாயிரத்தினுள் அவ்வவ் விலக்கண முரைத்தபடியே பொருந்துவனவாய், வழுவுதலில்லாத நான்கு பொருளையுங் குறைவறக் கூறப்பெற்று உலகத்து ஒத்தாரு மிக்காரு மில்லாத தலைவன் சரிதையுட்கொண்ட வுண்மையுற்று, நன்மணம், இல்வாழ்க்கை, கலவி, புதல்வர்ப்பேறு, பொன்முடி பொறுத்து இன்பமுறுதல், கடலை மேகத்தை மலையை யாற்றை நாட்டை நகரத்தை ஆதித்தவுதயத்தைச் சந்திரவுதயத்தைச் சிறுபொழுதைப் பெரும்பொழுதை வருணனை புரிதல், வீரபானம், காமபானம், புனல்புக்காடல், பொழில்புக்காடல், மந்திரம் பகர்தல், தூதுவிடுதல், ஒற்றூடல், நிரைகோடல், மேற்சேறல், எயிற்புறத்திறுத்தல், செருச்செய்கை, வென்றியெய்தல், வென்ற வேந்தன் நிலைபெற்றிருப்ப இறந்தவேந்த னிலையாமை மிகுத்துரைத்தல், ஆண்பாற்கூற்றுக் கைக்கிளை, பெண்பாற்கூற்றுக்கைக்கிளை யென்னுமிவற்றினையும் பாடாண்பகுதியென்பதனோடுங் கூறுமுறைமையுடன், படலமென்றுதல்இலம்பகமென்றுதல் பரிச்சேதமென்றுதல் பகுதிப்படுமவற்றை யுட்கொண்ட காண்டங்களோடும்பொருட்டொடர்புடைத்தா மொருதிறப்பாட்டும் இருதிறப்பாட்டும் ஆகிய பாப் பாவினத்தோடும் பாடைவிராயும் உரைவிராயும் மேற்சொன்ன வுண்மையுடைய முத்தகம் முதலிய மூன்றும் உட்கொள்வனவா முறைமையுடன், எட்டு மெய்ப்பாடும் மெய்ப்பாட்டுக் குறிப்பு மிகுந்து கல்வி நவியான்மிக்கார் மதிக்கும்படி யுரைப்பதா மென்றவாறு''

ஆதலால், ஒத்தாரு மிக்காரு மில்லாத ஒரு தலைவனது சரிதத்தை யுட்கொண்டிருப்பதே காப்பியமாகுமென்றும், அக்காப்பியத்தினுள் அமையவேண்டிய உறுப்புக்கள் இவையிவையென்றும் பொதுவியலுள் கூறப்பட்டிருக்கின்றனவே யன்றி, பாவிக அணிக்கு இயன்ற குணங்கள் ஒன்றேனும் அங்குக் காணப்படவில்லை. அல்லது, காவியத்தின் இலக்ஷணங்களையே அதன் குணங்களென்று இவர் கருதினாரென்னக் கொள்வோமாயின், திருக்குறளினின்று உதாரணம் எடுத்துக்காட்டியது எவ்வாறு பொருந்துமென்று நினைக்கவேண்டி வருகிறது. ஒத்தாரு மிக்காரு மில்லாத ஒரு தலைவனது சரிதத்தை யுட்கொண்டிருப்பது காவியத்தின் அடிப்படையான இலக்ஷணமாம் என்று கூறியவர், ஒருதலைவன் இல்லாததும்இருக்க இயலாததுமான திருக்குறளை இவர் உதாரணத்திற்காகக் கைக்கொண்ட சூழ்ச்சியை அவரே விளக்கினாலன்றி அறியும்வகை அரிதினு மரிது. இன்னவாறு, பாவிகஅணியின் இலக்கணத்தை ஆராயப்புகுங்கால், "மாறன் அலங்காரம்'' நமக்குச் செய்யவல்ல உதவி மிகச் சிறியதாம். இலக்கணவிளக்கமும் வீரசோழியமும், இவ்வணியின் இலக்கணம் யாவதாக இருக்கலாம் என்று ஐயங்கொள்வதற்கு வேண்டிய அளவே நமக்குச் சொல்கின்றன.

வடமொழி 'காவ்யாதர்சமும்' அதன்வழிநூலான தமிழ்த் தண்டியலங்காரமும், இத்தண்டியலங்காரத்தை அடிபற்றியிருக்கின்றஇலக்கணவிளக்கமும் வீரசோழியமும் பாவிகஅணிக்கு வகுத்துள இலக்கணத்தின் தன்மையை இதுகாறுங்கண்டோம். இனி, இவ்வணிக்கு முற்றிலும் வேறான இலக்கணம் கூறியிருக்கின்ற அலங்கார நூல்கள் சில வடமொழியில் உள. அதனையும் சிறிதிங்கு அறிந்துகொள்வது நலம்.

வித்யாநாதர் எழுதியுள்ள "ப்ராதபருத்ரீயம்'' என்னும் வடமொழி அணியிலக்கண நூலில், பாவிக அணியின் இலக்கணம் பின்வருமாறு காணப்படுகின்றது:—

> பாவிகமாவது, முன்னே நடந்ததையாவது இனி நடக்கப் போவதையாவது, இப்பொழுது கண்முன் நிகழ்வதுபோல் காணும்படி பிரத்யக்ஷப்படுத்தி அதி அர்ப்புதமான விஷயமாகச் சொல்வதாம்.

அதாவது, கவி ஒருநிகழ்ச்சியை நம் கண்முன்னே தோன்றுகின்ற காட்சியேபோலச் சொற்கொண்டு சித்தரிக்குந் திறமைதான் பாவிக அணியின் இவ்விலக்கணத்திற்கு ஆதாரமாகின்றதென்று கொள்ளலாம். 'பாவிகம்' என்னும் சொல்லிற்கு இணங்க, முன்னே நிகழ்ந்ததையேனும் பின் நடக்கக்கூடியதையேனும், தற்காலம் நடப்பதுபோல் பாவனைசெய்து தருகின்ற புலமைத்திறம் இந்நூலின்படி பாவிகஅணியாகும். ப்ரதாபருத்ரீயத்தில்கூறியிருக்கும்இவ்விலக்கணமே, வடமொழி, சந்திராலோகம், குவலயாநந்தம் என்னுமிரண்டு அலங்காரநூல்களிலும் இவ்வணிக்கு இலக்கணமாகக்காணப்படுகின்றது. அவ்வடமொழி சந்திராலோகத்தின் முறையைப் பின்பற்றி விசாகப்பெருமாள்ஐயர் தமிழில்எழுதிய அணியிலக்கணமும், சங்கரநாராயண சாஸ்திரிகளால், வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்ற குவலயாநந்தமும், இவ்வணிக்கு நிகழ்வினவிற்சியணி எனப் பெயர்தந்திருக்கின்றன. 'தற்கால நிகழ்வாகச்சொல்லும் அணி' என்பது இதன் பொருள். இந்நூல்கள் வகுத்திருக்கின்ற இலக்கணத்திற்கு இந்தப் பெயர் நன்குபொருந்தும். எனினும், "முன்நடந்ததையேனுமினி நடக்கப்போவதையேனும் நம்முனே நடந்திடுகின்ற தென்னல் நிகழ்வின்நவிற்சியணியாம்'' என்று சந்திராலோகமும் குவலயாநந்தமும் கூறியிருப்பது இவ்வணியின் இலக்கணம் முழுவதையுங் காட்டுவதற்குப் போதாது. ஏனெனில், "துரியோதனனும் தருமனும் சூதாடுகின்றனர். தருமராசன் அனைத்தையுந் தோற்கின்றான், பிறகு தன்னுடன் தன் தம்பியரையுந் தோற்கின்றான்; அதன்பின்னர்த் திரௌபதியையுந் தோற்கின்றான். அவளைச் சபையில்கொணர்ந்து துகி

லுரிகின்றனர். ஓலமிடுகின்ருள். துகிலோ அவிழ்க்க அவிழ்க்க வளர்கின்றது...'' என்று கூறுங்கால், முன் நிகழ்ந்த வொன்றை இப்பொழுது நிகழ்வதுபோலச் செப்பினுலும், பாவிகம் அல்லது நிகழ்வினவிற்சி என் னும் அணியை இதனிற்காண்பதற்கில்லை. அப்படியே பாவங்கள் பலசெய்கின்ற ஒருவனைநோக்கி, "இதோ இறக்கின்ருய்; நரகத்தில் விழுகின்ருய்; நெருப்புக் குழியில் உன்னை ஆழ்த்துகின்றனர்'' என்னல் போல் வனவும், இனி வருவதை நிகழ்காலத்தில் கூறியிருப் பினும், இவ்வணி ஆதற்கில்லை. இவையிரண்டும் கால வழு அமைதியில் அடங்கும். நடந்த ஒரு கதையை நிகழ்காலத்தில் சொல்லுகின்ற இயல்புபற்றி வந்தது முன்னது. இதனை ஆங்கிலத்தில் historic present என்பர். அதனைச் 'சரித்திர நிகழ்வு' என்ன மொழி பெயர்க்கலாம். பின்னது, பாவம் செய்பவன் நரகம் அடைவான் என்னும் நிச்சயம்பற்றி நிகழ்காலத்தில் கூறப்பட்டிருக்கின்ற மிகுதி அல்லது தெளிவு ஆம். இன்னவைகளை நிகழ்வின் நவிற்சியணி என்னலாகா து. மற்று, முன்னே நிகழ்ந்ததேனும் இனி நிகழப் போவதேனும், நம் கண்முன்னே நிகழ்வதுபோலத் தோன்றும்படி, வருணனைச்சிறப்பாலும் சொல்லின் ஆற்றலாலும் பிரத்தியக்ஷமாவதோடு அதனை அதி அர்ப்புத விஷயமாகவும் சொல்ல வேண்டியது இவ் வணி அமைவதற்கு அவசியமாம் என்று ப்ரதாபருத் ரீயத்தில் வகுக்கப்பட்டிருக்கும் இலக்கணமே இவ் வணியின் தன்மையைக் காட்டுகின்றது.

இந் நிகழ்வினவிற்சி அணி நேரே கவிக்கூற்ருகவும் அமையலாம், அல்லது ஒரு பாத்திரத்தின் மொழி யாகவும் இருக்கலாம்.

கோசிகமுனிவனோடு இராமன் மிதிலாநகர வீதி வாய்ச்சென்றபோது, சீதை தன்தோழிமார்களோடு கன்னிமாடத்தில் தோன்றியகாட்சியைக் கம்பர் பின் வருமாறு வருணித்திருக்கின்ருர்:—

தந்நே ரில்லா மங்கையர் செங்கைத் தளிர்மானே
அன்னே தேனே யாரமிர்தே யென்றடி போற்றி
முன்னே முன்னே மொய்ம்மலர் தூவி முறைசாரப்
பொன்னே சூழும் பூவினை துங்கிப் பொலிகின்ருள்

[தமக்குநிகரானவர் வேறு இல்லாத தோழியர், "தளிர் போன்ற சிவந்த கைகளை யுடையவளே, மான் போன்ற வளே, எங்கள் அன்னையே, தேனே, ஆர் அமிர்தே'' என்று தாளில் வணங்கி, முன்னே முன்னே அடர்ந்தமலர்களைத் தூவி முறைப்படி வரிசையாக நிற்க, தாமரையில் தங்கும் திருமகளே போல மெல்லமெல்ல நடந்து சீதை விளங்கு கின்ருள்.]

இங்கு, 'பொலிந்திட்டாள்' என்னது 'பொலிகின் ருள்' என்று நிகழ்காலத்தில் கூறியது, பாவிகஅணி யைத் தெரிவிக்கின்றது. ஆயினும், இந் நிகழ்காலக் கூற்றுமட்டுமே இச்செய்யுளை அவ்வணியிற்சேர்த்து நிற்கின்றது என்றெண்ணற்கில்லை. செய்யுளின் ஓசை யும் சொற்களின் செம்மையும் அமைப்பினது அழ கும் அனைத்துஞ் சேர்ந்து புரியும் ஒரு சூழ்ச்சியால் முன்னேசென்ற அந்நிகழ்ச்சி மீண்டும் இப்பொழுது நம் கண்கள்முன் நடைபெறுவதுபோல் தோன்றலா கின்றது. இதனை நாம் இன்று நம் மனக்கண்ணால் கண்டு உவக்கச் சிறிதே மனோபாவனைவேண்டும். இப் பாவனைக்கு உதவிசெய்வதே பாவிக அணி. இன்னு மோர் உதாரணம் கம்பராமாயணத்திற் காணலாம்,

உயிர்நீங்கிய தயரதன்உடலத்தைக் கட்டித்தழுவி விடாது அழுத அவன் உரிமைமாதரை,

கைத்த சொல்லா லுயிரிழந்தும்
புதல்வற் பிரிந்துங் கடையோட
மெய்த்த வேந்தன் திருவுடம்பைப்
பிரியா தழுது விட்டிலராற்
பித்த மயக்காஞ் சுறவெறியும்
பிறவிப் பெரிய கடல்கடக்க
உய்த்து மீண்ட நாவாயில்
தாமும் போவா ரோக்கின்ருர்.

[கைகேசியினது கசப்பானசொற்களினல், புதல்வனைப் பிரிந்தும் உயிரையிழந்தும் முடிவுவரையில் தன் மெய்ம் மையையே நிலைநிறுத்திய தயரதனதுஉடலத்தை விட்டுப் பிரியாமல் அழுது பற்றிக்கொண்டிருந்தனர். அன்னவர், மனிதரைப் பித்தராக்கும் மாயையாகிய சுருமீன்கள் அலை கின்ற இப்பிறவியாகிய பெரிய கடலைக் கடக்கும்படி செ லுத்தி அக்கரை சேர்த்துத் திரும்பிவந்திருக்கின்ற மரக் கலத்தில் தாமும் போகின்றவர்களை ஒத்திருக்கின்ருர்]

எனக் கூறுமிது, முன்னே, இறந்த ஒரு மன்னவன் உடலத்தை அவன் மனைவியர் தழுவியழுத வொரு செய்தியை அதிஅர்ப்புத விஷயமாக்கி நம்மெதிரே நிகழ்த்திக் காட்டுவதால் பாவிகஅணி யாகின்றது.

இவையிரண்டும், முன்னை நடந்தனவற்றைத் தற் போதுநிகழ்வனபோல் காட்டியமைத்த கவிக்கூற்றுக் களாம். இனி, பின்னே நிகழக்கூடிய ஒன்றினை இப் பொழுது நிகழ்வதாகப் பாவித்துப் பாத்திரத்தின் வாயிலாகப்பிறப்பிப்பதற்கு ஷேக்ஸ்ப்பியர்நாடகத்தி னின்று ஓர் உதாரணங் காணலாம்:—

ஷேக்ஸ்ப்பியர் எழுதிய "காற்று மழை'' (The Tempest) என்னும் நாடகத்தில், அலான்ஸோ என்னும் அரசன், கடலிற் செல்லுங்கால், கப்பல் உடைந்து, அவன் தம்பி ஸபஸ்ட்டியன் என்பவனோ டும், அத்தம்பியின் நண்பன் அன்டோனியோ என் பவனோடும், மற்றுமுள்ள பரிஜனங்களோடும் ஒரு தீவில்ஒதுக்கப்பட, அங்கு, அவ்வரசனும் அவன்பரி ஜனங்களும் துயின்றிருந்தபோது, துன்மதியுடைய அன்டோனியோ, அரசனைக் கொலைசெய்து பட்டம் பெறும்படிமெல்லமெல்ல ஸபஸ்ட்டியனைத் தூண்ட நினைத்து அவன் உடன்படுவானே என்பது தெரிவ தன்முன் இத்தகைய ஒரு செய்தியை வெளிப்படை யாக அவனுக்குத் தெரிவிக்கத் துணியாமல், குறிப்பி ஞல் உணர்த்துவானகி,

"(இப்படி அனைவரும் தூங்கிக் கிடக்கும் இச்சமயத்தில்) யாதே அருமை, தகுதியுடைய ஸபஸ்ட்டியனே, ஓ, யாதே அருமை?—வேறு வேண்டா! எனினும், நீ யாவதா யிருத்தல் வே ண்டு மென்பதை நின்முகத்திற் காண்கின்றேன் என நினைக்கின்றேன்: இச்செவ்வியே நின்னைச் செப்புகின்றது; வலிய வென் மனத்தின் பார் வை நின் சிரமீது ஒரு மகுடம் இறங்கவும் காண் கின்றது.''

—அங்கம் 2. களம் 1,

என்கின்ருன். (இந்நாடகம் இக் கலாநிலயம் 6-வது வால்யூம் இதழ்களில் மொழிபெயர்ந்து வந்திருக் கின்றது. இப்பாகத்தை 506-வது பக்கத்தில் காண லாம்). "அரசனைக் கொன்றுவிட்டால் பிறகு அவன் மகுடத்தை நீ சூடிக்கொள்வாய்'' என்பதை, "வலிய

என் மனத்தின் பார்வை நின் சிரம்மீது ஒரு மகுடம் இறங்கவும் காண்கின்றது'' என அன்டோனியோ கூறி அப்பாவனையினல் பிரத்யக்ஷப்படுத்துகின்றனாத லால், இது பாவிகஅணி யாகின்றது.

இனி, இந்தப் பாவிகஅணியின் இலக்கணத்தைத் தொகுத்துக்கூறி முடிக்கலாம்:—

(1) தண்டியாசிரியரின்படி, நிகழ்ச்சி யொற்றுமை யும், அடைமொழிஅமைதியும், வருணனைஉதவியும் விழுமியகருத்தும் வாய்ந்த ஒரு காவியத்தின் பண்பு, பாவிக அணி எனப்படுகின்றது. இலக்கணவிளக்க மும் வீரசோழியமும் மாறனலங்காரமும் இவ்விலக் கணத்தையே ஏற்றுக்கொண்டிருப்பனபோல் தோன் றுகின்றன.

(2) பிரதாபருத்ரீயத்தின்படி-முன்னே நடந்ததை யேனும் பின்னே நடக்கப்போவதையேனும் பிரத்தி யக்ஷப்படுத்தி அதிஅர்ப்புத விஷயமாகக் கூறுவது பாவிக அணியாம். சந்திராலோகமுங் குவலயாநந்த மும் இவ்விலக்கணத்தையே கூறுகின்றன. இதற்கு இணங்க, நிகழ்வினவிற்சியணிஎன்ற பெயர் பொருத் தமும் பொருட்குறிப்பு முடையதாயிருக்கின்றது.

குறிப்பு:—முன்னைய இலக்கணம், ஒரு அணியின் அமைப்பைக் காட்டுவதனிலும், ஒன்றுஉயரிய காவி யமாவதற்கு அதன்கண் எவ்வகைச்சிறப்பியல்புகள் காணற்குரியன என்பதனையே தெரிவிக்கின்றது. ஆத லின், காவிய உறுப்புக்களுக்குரிய இலக்ஷணம்அன் னது என்பதன்றி அதனை ஓர்அணியாகக்கொள்ளல் அருமை. ஏனெனில், வேற்றுமையைக் கடந்து ஓர் ஒற்றுமையுணர்ச்சியால் பிறப்பதே அணியமைப்பின் இரகசியமாம் என்றுமுன்னுரையிற் கூறியுள்ளோம். அதன்படி, இறந்தகாலம் எதிர்காலம் என்ற வேற்று மையைக் கடந்து நிகழ்காலச் செய்தியாகவே நோக் குகின்ற அந்நீர்மையே பாவிகம் (அல்லது நிகழ்வின் நவிற்சியணி) என்று கூறியுள்ள மற்றைய இலக்கண மே, அணி என்னுந் தன்மைக்கிணங்கிய இலக்கண மாம் என்னக் கொள்ளலாம்.

சூரியன்

II. பகலவன் உருவம்
(வடிவமும் அமைப்பும்)

(73-வது பக்கத் தொடர்ச்சி)

நீதியாய் நிலனுகி நெருப்பாய் நீராய்
நிறைகாலாய் இவையிற்றின் நியம மாகிப்
பாதியா யொன்ருகி இரண்டாய் மூன்ருய்ப்
பரமாணுவாய்ப் பழுத்த பண்க ளாகிச்
சோதியா யிருளாகிச் சுவைக ளாகிச்
சுவைகலந்த அப்பாலாய் வீடாய் வீட்டின்
ஆதியாய் அந்தமாய் நின்ருன் தன்னை
ஆரூரிற் கண்டடியேன் அயர்ந்த வாறே.

—திருநாவுக்கரசு - திருத்தாண்டகம்

வியப்பில் விளையும் ஆராய்ச்சி: "செங்கதிர்ச் செல் வன் ஒருமுறையே குதிரைபூட்டினன் ; எழுநிறக் கு திரையோடெங்கும் அலைந்து திரிகின்ருன்; இன்னும் அவிழ்த்தபாடில்லை; அங்ஙன மன்ருே அரசனும்'' என்ற பொருள்படப் பாடுகிருர் காளிதாசர். மற்று,

"உறங்கு மாயினும் மன்னவன் தன்னொளி
கறங்கு தெண்டிரை வையகங் காக்கும்''

—சிந்தாமணி

என்று புலவர்கள்பாடினும், உறங்காதுவையத்தை க் காப்பவன் பகலவனே யன்ருே? தூவெரிச் சுடர்ச் சோதியுட்சோதியாம் இப் பெரிய பொருளே, நெருப் பாய் நிலைநின்று, இந்நிலவுலகை முற்றும் தன் கிரணங் களான செங்கோலைச்செலுத்தி, இங்கு அளந்தவாறு அப்புறத்து வான் எல்லையும் அளந்து, துஞ்சும்போ தும் துணையெனலாகி, இரவிலேயும் உறக்கமின்றி, எ ப்போதும் ஒளிவிடும் பரமாணுக் கூட்டங்களை உலக முய்ய அமுத மழையாகப் பொழிந்து வருகின்றது. இத்தெள்ளருச்சிவசோதித்திரளைக் கண்டோர்வியப் போடும், இஃது எத்தன்மையதோ, என, அறிய முற் படுவது இயல்புதானே. எனவே, இவ்வாராய்ச்சிபல் லாயிரம் வருடங்களுக்குமுன்னரே, மாந்தர் செய்ய ஆரம்பித்ததொன்றேயாகும். அஃதுஇக்காலத்திலும் முடிவிற்கு வந்ததெனச் சொல்வதற்கு இடமில்லை.

இவ்வொரு மணியை, உலகிற்கோர் உறுதிதன்னை, உதயந்திலுச்சியை, ஒவ்வொருநாளும் கண்டுவந்தா லும், உணர்தற்கரியதோர் சோதியாகவே இது இன் னமும் நம்மைத் திகைப்பிக்கின்றது. "நீதியாய் நில னுய்'' என்று அப்பர் பாடுவதெல்லாம் சூரியனுக்கும் பொருத்தமாவதை இனிக் காண்போம்.

ஊனக்கண் காட்சி:—தூரதிருஷ்டிக்கண்ணுடிகள் ஏற்படாததற்கு முன்னர், இக்கதிரவனை ஊனக்கண் ணாலே கண்டு சில உண்மைகளை முன்னோர்கள்வெளி யிட்டனர். ஆனல், அதிகாலையிலு மாலையிலுந்தான், அவனை ஊனக்கண்ணால்காணக்கூடும். அப்பொழுது காண்பதும் அவனுடைய முன்னொளியும்பின்னொளி யுமேயா மன்றி அவனது நேர் ஒளியன்று; பகலவன் எழுவதற்கு முன்னரேயே அவன்வடிவைச் செக்கச் சிவந்த திகிரிபோலக் காண்கிருேம். புலவர் சிலர்,

அலையாழி முழுநீல உறைநின்றும்
மாணிக்கமணி யாடி போல
உலையாத ஒளிகொண்ட கதிராயிரத்
தோனும் உதயஞ் செய்தான்

—வில்லிபாரதம்

என்றினிதுபாடிக்களிக்கின்ருர். அங்ஙனமே மாலையி லும் சூரியன் குடதிசையில் மறைந்த பின்னரும், அ வனைவட்டமான சிவப்புப் பந்துபோல் காண்கிருேம். இல்லாததொன்று, இன்னவாறு தோன்றுவது ஓர் இந்திரஜாலம்அன்ருே? காலைவேளைப் பனியிலே சில போது மூன்றுகதிரவர்களுதயமாகவும்காண்போம். இதன் உண்மைதான் என்ன? தண்ணீரில் நமது விர லிற் பாதியைத் துவைப்போமானல், நமது விரல் நே ராய் இருந்தாலும், நீரில் உள்ள பகுதியும், மேலேவெ ளியில்உள்ள பகுதியும், நேரே தோன்ருமல், வளைந் திருப்பதுபோலத் தென்படும். ஒருபகுதி நீரினூடும், ஒரு பகுதி வெளியே காற்றினூடும், கிடக்கின்றமையி னிலை வேறுபாட்டால், இவ் வொளிவளைவு தோன்று கிறது. அவ்வாறே, அடிவானத்திலே, சூரியன் ஒளி, அவன் தோன்றுவதற்குமுன்னரும் [illegible]

பின்னரும், வளர்ந்து மேலேறித் தோன்றுகிறது. நன்ஞகனார் என்ற பழந்தமிழ்ப் புலவர்

> "விசும்பு நீத்தம் இறந்த ஞாயிற்றுப்
> பசுங்கதிர் பழுநிய சிவந்து வாங்கு அந்தி"
>
> —புறநானூறு

என்று பாடுவார்; இவ் வொளிவளைவை, "வாங்கு" என்ற சொல்லால் சுட்டிக்காட்டுகிறார்போலும். சிவந்தெழுந்த சூரியனைக் கடலிலே கண்டு பச்சை மயில் மேல் ஏறிவரும் செக்கச்சிவந்த செவ்வேளை நினைத்த பெரியோர்,

> "உலக முவப்ப வலனேர்பு திரிதரு
> பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
> ஓவற இமைக்குஞ் சேண்விளங் கவிரொளி"
>
> —திருமுருகாற்றுப்படை

எனப் பாடினர்; சிறிது நேரம் சென்றதும் கருமலை மேலே சூரியன் பொன்னிறம்பெற்று விளங்குவதைக் கண்டு திருமாலின் பீதாம்பரத்தையும், பொன்முடியையும் நினைத்துக்கொண்டு,

> "மணிவரை யூர்ந்த மங்குன் ஞாயிற்
> றணிவனப் பமைந்த பூந்துகில் புனைமுடி
>
> —பரிபாடல்

எனப் பாடினர். இவ்வாறு, முதலில் சிவப்பு உருண்டையாகவே காணப்பட்ட அதிகாலைச் சூரியன், வானத்தில் உயர உயர, மஞ்சள்நிறம் பெற்றுப் பின்னர் உச்சியில் சென்றகாலத்து, அதிக வெண்மையாயும் தோன்றுகின்றான் அன்றோ? கிழக்கினில் தோன்றும் போதுபெரிதாயும், உச்சியில்சிறுத்தும், பின் மேற்கே மறையும்போது பெரிதாயும் தோன்றுகின்றான்.

இதனைக் கம்பர்,

> "எழுமிடத் தகன்றிடை யொன்றி யெற்படு
> பொழுதிடைப் போதலிற் புரிசைப் பொன்மதில்
> அழன்மணி திருத்திய அயோத்தி யாளுடை
> நிழலெனப் பொலியுமால் நேமி வான்சுடர்"
>
> நகரப்படலம் - 41.

என்று பாடுகின்றார். ஒரு கண்ணாடிவில்லையைச் சூரியன் எதிரே பிடித்து, அவன் ஒளியை அதன்வழியே பாய்ச்சி, ஒருமுகப்படுத்த முயல்கையில், ஒருமுகப்படும்போது அவ்வொளி சிறுத்தும், ஒருமுகமாகாது புன்முகப்பட்டபோது பரந்தும்தோன்றக்கண்ட கம்பர், எல்லா ஒளிகட்கும் பிறப்பிடமான சூரியனையே, அயோத்தியின் எதிரொளிஎன்னத் தலைகீழாகப்பாடுகின்றார். கண்ணாடி வில்லைகளாக, அயோத்தியிலுள்ள அழன்மணிகள் அமைந்தனவாம். அவ்வயோத்தியின் ஒளி ஒருமுகப்பட்ட உச்சிநிலையில் சுருங்கியும், ஒருமுகப்படாத எழுமிடத்தும் எற்படு பொழுதினும் அகன்றும்தோன்றுகின்றதாம். ஈதே சூரியனும். இந்தக் கம்பனுடையவம்பினும், சூரியனுடைய வடிவம் மாறுதல் வெளியாகிறதன்றோ? இவற்றிற்கும் மேலே ஊனக் கண்ணாலே நாம் என்ன காணக்கூடும்? கணக் கண்டுதான் சொல்லுதல் வேண்டும்.

ஞானக் கண்ணாடிக் காட்சி:—ஊனக்கண் பரசமுணரா இப்பதியை ஞானக்கண்ணும் தூரதிருஷ்டிக் கண்ணாடி கொண்டு, கண்டு, பல உண்மைகளை யறிகின்றோம். இந்த ஆங்கிலமுறையே வந்த விஞ்ஞான சாஸ்திரநிலையில், சூரியமண்டலத்தின் தன்மையைக் இனிநாம் காண்போம். சூரியனை நேரே காண, நம்முடைய கண்கள் போதுமான சக்திபெறவில்லை. உதய ஆரம்பத்திலும், அஸ்தமன முடிவிலும், முன்கூறியவாறு சற்று நோக்கலாமே யொழிய ஏனைய காலங்களில், பகலவனை நாம் நேரில் காணமுடியாது. அவ்வாறு செய்வோமாயின் கண்கூசுவது மன்றிக் கண் கெட்டேபோய்விடும். ஆதலினால், அவன் ஒளியை மழுக்க நாம்வழிதேடவேண்டும். தூரதிருஷ்டிக்கண்ணாடி வழியாக நேரே பார்த்தாலும், இவன் நம்கண்ணைக் குத்துவான். சூரிய கிரஹண காலத்தில், சிறுபிள்ளைகள் கண்ணாடியிலே கரிப்புகையூட்டி, அதன் வழியே சூரியனைப் பார்ப்பதை நாம்அனைவரும் அறிவோம் அன்றோ? இன்னவாறே விஞ்ஞான சாஸ்திரிகள் கறுப்புக் கண்ணாடியினாலே ஒளியை மழுக்கும் ஒருவகை மூடிகளைச் செய்திருகின்றார். இவற்றிற்கு ஒளிவிலக்கிகள் (Blinds) என்று பெயர். பளிங்கினாற் செய்தஇந்த மூடிகளைக்கொண்டு, சூரியனதுஒளியை மழுக்கித் தூரதிருஷ்டிக் கண்ணாடி வழியே, பகலவனின் உருவத்தைமாத்திரம் நாம் நமது கண்ணிற்கு ஒரு கெடுதியும் இன்றிக் காணலாம். அவ்வாறு,நாம் தூரதிருஷ்டிக் கண்ணாடியால் காண்கிற காட்சிகள், அற்புதக் காட்சிகளாகும். தூரதிருஷ்டிக் கண்ணாடியால், சமீபத்திலே இவ்வாறுகாணும்போது,சூரியன் மிகவும் பெரியவடிவமாய்த் தோன்றுகின்றான். ஒரே சமயத்தில், அவன் வடிவம் முழுவதையும் அதிலே காண இயலாது. ஒவ்வொரு பகுதியே தோன்றிவரும். ஆதலால், ஒவ்வொருபாகத்தையும் தனித்தனி நாம் கண்டறியவேண்டுமே யொழிய, இந்தப் பாகங்களை யெல்லாம் ஒன்றாகவைத்துக் காணல்இயலாது. ஆதித்தனுடைய உருவத்தின் பலபாகங்களைத் தனித்தனியே கண்டுதான் களிக்கலாம். சூரியன் சிவந்தும் பசந்தும் வெளுத்தும் தோன்றுகின்றானன்றோ? எப்போது இவனைத் தூரதிருஷ்டிக்கண்ணாடிவழியாய்க் கண்டால் நல்லது? அவன் வெண்மையான ஒளிவீசி நிற்கும் சமயத்தில், நம்முடைய பார்வைக் கெதிரே மேகங்களவனை மறைக்காதிருக்கும் பொழுதுதான், தூரதிருஷ்டிக் கண்ணாடி கொண்டு அவனை நோக்கிக் காண நல்ல தருணமாகும்.

சுடர்க்கோழுந்துகள்-(Solar Prominences):—தூரதிருஷ்டிக் கண்ணாடி வழியாக அத்தகைய நல்ல தருணத்தே பார்க்கும்பொழுது, இறக்கமான வெண்ணெருப்புப் பந்துபோலத் தோன்றுகிற சூரியனிடத்திருந்து, செக்கச்சிவந்தெழுகின்ற சுவாலைகள்பல்லாயிரம்கல் தூரம் எழுந்து வீசக்காண்கின்றோம். வெயிலில்வருந்திய ஒருநாயானது, நாவைத்தொங்கவிட்டுக்கொண்டு தண்ணீருக்காக, இரைக்கஇரைக்க ஓடியலையும்போது, அந்நாயின் நாவானதுஎவ்வாறு அலைவுண்ணுமோ, அவ்வாறே, சூரியனிடத்திருந்து எழுமிந்தச் சுடர்க்கொழுந்துகளும் அலைந்து ஆடுவதைக் காணலாம். இதைப் பார்க்கும்பொழுது ஆதித்தன் ஆயிரம் சிவந்த நாக்குக்களை யுடையவன் என்று கவிகள் வர்ணிப்பது சிறிது உண்மைதான் என்று தோன்றுகின்றது. இச் சூரியக் கொழுந்துகளின் அளவைக் கணக்கிட்டுக் கூறலாம். இவை, சூரியனுடைய தீப்பிழம்பிலிருந்து, இரண்டு லக்ஷத்து ஐம்பதினாயிரம் கல்லுக்கு (250,000) அப்பாலும் சென்று பாய்கின்றன. இவற்றின்உயரம், சூரியன் உயரத்தில் (குறுக்களவில்) காற்பங்குக்குமேலும் செல்கின்றது. ஒருபெரிய வெற்றிலை யளவில் குறுக்கி, இந்தச் சுடர்க் கொழுந் தொன்றை எழுதினால், நமது பூமியை அதிலே ஊர்ந்து செல்லும் சிறு ஈயைப்போலத்தான் குறுக்கி எழுதவேண்டும். நமது பூமியைவிட, அத்துணை மடங்கு பெரியது இச்சுடர்க்கொழுந்து. வெள்ளை வெளுக்கச் சுடர்விட்டு எரியும் நெருப்புருவாய் எழுந்த ஒருபூதம் காலும் கையும் தலையுமின்றிக் கவந்தமாய் உருண்டு திரண்டு உடம்பெல்லாம் செக்கச் சிவந்த நாக்காய் விளங்க, அந் நாக்களையும் கையளவில்ஓங்க வீசிக் கொடுமையுடன் கடுகடுத்துச் சுழற்றிக்கொண்டே வெகுண்டுருண்டு, அட்டைக்கூத்தாடி வருவதே போல இச்சுடர்க்கொழுந்தாற்பொலியும் சூரியனும் தோன்றுகின்றான். இந்தச் சுடர்க்கொழுந்துகளை ஊன்றி நோக்குவோமானால் இவை இருவகையாக விளங்கக் காண்போம். நிலைநின்றெரியும் சுடர்க்கொழுந்துகள் (Quiescent Prominences) ஒரு வகை; பொங்கியலைந்தெரியும் சுடர்க்கொழுந்துகள் (Eruptive Prominences) மற்றொருவகை. பொங்குஞ்சுடர்க் கொழுந்துகள், சிடுசிடுப்புடன் பீறிட்டுக்கொண்டு வருகின்றன. இவை ஜலமூலவாயு (Hydrogen) மயமாகவோ, உருகி வழிகின்ற லோகங்களின் வடிவாகவோ விளங்குகின்றன. இவற்றை இன்னும் ஊன்றிநோக்கியாராய்ந்தால், மேலும் பற்பல வகையாப் பிரிக்கலாம். அவற்றை எல்லாம் இவ்விடத்தே விரித்து நாம் கூற வேண்டுவதில்லை. நின்றெரியும் அச் சுடர்க்கொழுந்துகளோ நமது வானத்திற் பரவும் மேகங்கள் போல் விளங்குகின்றன. முக்கோணமாய் விளங்கும் வெள்ளை மேகங்களைப்போல நின்றெரியும் சுடர்க்கொழுந்துகள், பெரும்பான்மையும்மாறாதே நிலைத்திருக்கின்றன. இவற்றின் இடையிடையே மாறிமாறிக் கரிய மேகம் போன்ற காட்சிகளும் தோன்றுகின்றன. வானத்தே, மேகங்கள் பரவும்போது சிற்சில இடத்தே அடர்ந்துநெருங்கியும்,சிற்சிலஇடத்தேஇல்லாமலும் இருக்கக் காண்பது போல, இச்சுடர்க்கொழுந்துகளும் சிற்சில இடத்தே மிகச் செறிந்தும்,சிற்சில இடத்தே நெகிழ்ந்தும், விளங்கக்காண்கின்றோம். இக்கொழுந்துகள், சூரியப் பிழம்பினின்று எதனால் எழுகின்றன, எவ்வாறு கிளம்புகின்றன, என்று இதுவரையிலும் நிர்ணயித்தார் ஒருவரும் இலர்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

(7-வது வால்யூம் 793-வது பக்கத்தொடர்ச்சி)

[7-ம் பத்து 3-ம் தசகம்.]

1-ம் பாசுரம்

> வெள்ளைச் சுரிசங்கோ டாழி யேந்தித்
> தாமரைக் கண்ணனென் னெஞ்சி னூடே
> புள்ளைக் கடாகின்ற வாற்றைக் காணீ
> ரென்சொல்லிச் செல்லுகே னன்னை மீர்காள்
> வெள்ளச் சுகமவன் வீற்றி ருந்த
> வேத வொலியும் விழா வொலியும்
> பிள்ளைக் குழாவிளையாட் டொலியு மறாத்
> திருப்பே ரையிற் செல்வன் நானே.

அவதாரிகை:—சென்ற தசகத்தி னிறுதியில், ஓர் பிராட்டியின் திருத்தாயார் பகவானிடத்தில் மோகங்கொண்ட தன் பெண் நாயகனைப் பிரிந்த வியசநமெல்லாம் தீரும்படி பரமகிருபாநிதியான பகவானினது அருளால் அவனை ஒருவரு மெதிர்பாராம லிருக்கையிலே யாதிர்ச்சிகமாக அடைந்தாளென்று மொழிந்தாள். இது இப்படியிருக்க இப்பிராட்டி "வெள்ளச் சுகமாய் அவன் வீற்றிருக்கும் திருப்பேரையில்செல்வன் நான்" என்று சொல்லும்படி என்ன ஸம்பவம் மத்தியில் நடந்ததுஎன்பது இத்தசகத்தின் பாசுரங்களின் உதவிகொண்டே அறியற்பாலதாம். இவளோ ராஜஸ்திரீ முறைமையில் வாயிற்படி தாண்டாத பத்நி. எம்பெருமான் பெரியதிருவடியாகிய கருடாழ்வான் மீது அமர்ந்து சங்கும்சக்கரமும்மற்றுமுள்ள ஆயுதங்களோடும் கடாவிச் சென்றனரென்று முதல்பாசுரம் கூறுவதையோஜித்தால்,இப்பிராட்டி பகவானின்முந் தருணைக்குத் தமது சம்மதிதந்து அவனால் புதுக்கணித்த செந்தாமரைக் கண்களாலும் திவ்விய அதரமென்ன திருவபிஷேகமென்ன இவைகளாலுமிவள் அநுகிரஹிக்கப்பட்டாளென்று அந்தப்பாசுரம் விபரம் கூறுகின்றதால், இவன் பூர்ணஸர்மானத்தோடும் விஜயகோஷ கோலாஹலத்தோடும் வேட்டைக்குப் புறப்பட்டதாக நாம் கொள்வது பொருந்தக்கது. மேல் பாசுரங்களிலும், அவனது கலவியிலேற்பட்ட மனப்பாரிப்பும் குணானுபவமும் இவள்எடுத்துக்கூறி அவள் மனத்தின்கண் இவைஉலாவுகின்றனவென்று காட்டுவதனால் இவள் பூர்ண உற்சாகத்துடன் தமது புதுக்கலவியினால் ஏற்பட்ட சந்தோஷம் கரைகடந்தோடிவழிவதை ஒருவாறு ஆற்றிக்கொடுக்கவேண்டுமென்றுபகவானேவேட்டைக்குத் திருப்பேரைக்குச் சென்றுவருகின்றோமென்று இப்பிராட்டியின் அனுஞ்ஞையைப் பெற்றானென்று கொள்ளுவதே உசிதமாகும். இப்பிராட்டி தான் திருப்பேரைக்குத் தனித்துச்செல்வது தகுதியல்ல வென்றும், சற்று முன்பு தானே பகவான் இவளிடம் விடைபெற்று எழுந்தருளினராதலால் போய்த்திரும்பிவரக்காலமாகவில்லையென்றும், நாயகனைப் பிரிந்தவுடனே தானே அப்பிரிவுக்காற்றாது படுதல் மரியாதையன்றென்றும் தோழிமார்களும் அன்னைமாரும் ஸமாதானங்கள் சொல்ல, அதனைக்கேளாமல் இந்தப்பிராட்டியானவள் பத்துப் பாசுரங்களில் அவர்களை முனிந்து, மனத்தில் மூள்கின்றதுயரத்தால் தனக்கு லஜ்ஜைபோய்விட்டதென்றும் தன்னை ஊரார் பழிசொன்னாலும் தானே திருப்பேரைக்குத் தனியே போவாளென்றும் முறையிடுவதால், இவர்கள் சொல்வதுபோல் வெகு அல்பகாலப் பிரிவுக்கே இப்பிராட்டி யாற்றாது படுகின்றாளென்ற உண்மை நமக்கு விளங்குகின்றது. இஃது இப்படிக் காகுமோவென்றால், இப்பிராட்டி இப்போழ்துதான் முதல்தடவையாய்க் கலந்துபிரிந்தவளானதால் தான் ஸம்மதி தந்தாலும் பிரிவினது கொடுமையை அறியாதவளாய்ப் போந்து நடந்தேறியுதென்றும் இவளது தத்காலமனோநிலை பயஹேதுவால் இவளை அதிமாத்திரம் அல்லல் படுத்துகின்றதென்றும் நாம் ஊகித்து அறிந்துகொள்ளலாம்.

ஸ்வாபதேசமாக இத்தசகத்தில், எம்பெருமானை விட்டுப்பிரிந்த இவ்வாழ்வார், வைகுண்டத்தில் மற்ற நித்தியஸூரிகளைப்போலத் தாமும் பகவானின் அடி

யார்கூட்டத்தில் நின்று ஸகல கைங்கரியங்களையும் செய்ய அந்த ஸ்தானத்திற்கு ஏகவேண்டிய நிமித்தந் தம் பிரகிருதிஸம்பந்தத்தைத் தவிர்த்தருள வேண்டுமென்று ஆறும் பத்தின் இறுதியில் சரணாகதிசெய்ததுடனே பலிக்காமல் போனதுபற்றி நிரம்ப இன்னாதாராகி நேரிட்டிருக்கிற காலவிளம்பரத்தை வெறுத்திங்கு முறையிடுகின்றார். இக்கருத்து பலசுருதிபாசுரத்தால் ஸூசிப்பிக்கப்படுகிறது.

குறிப்புக்கள்:—நெஞ்சினூடே - என் மனத்தினில், புள்ளைக் கடாவுகின்றான் - கருட பக்ஷியை அதிவேகமாய் நடத்திச்செல்கிறான்; அதாவது அப்போழ்தே எம்பெருமான் புறப்பட்டுப்போவதால் அவனகன்றாலும் தன் மனதினின்று போகவில்லை யென்றதாக ப்ரியங்கொண்டு சொன்னபடி. தம் திருக்கண்களைப் போலவே திவ்வியாயுதங்கள் சோலையும், வெள்ளச்சுகம் - கரைகடந்த ஸுகம், வீற்றிருந்த - வீறு, உத்கிருஷ்டம் தோன்ற. என்னை நீங்கள் கொண்டுபோய் விடுங்கோள். அன்னைமீர்காள்! உங்கள் கண்களில் தோன்றுதபடியால் என் வேண்டுகோளை ஆதரிக்க நீர் ஆதரிக்கவில்லை. நானோ என் மனத்தில் நடையாடும் தோற்றங்களை உங்களுக்குச் சொல்லவல்லேன் அல்லேன். பிறகு நான்செல்வதே எஞ்சிஉளதென்கிறாள்.

2-ம் பாசுரம்

நானக் கருங்குழற் றோழி மீர்கா
ளன்னையர் காளயற் சேரி யீர்காள்
நானித் தனிநெஞ்சங் காக்க மாட்டே
னென்வச மன்றி திராப்ப கல்போய்த்
தேன்மொய்த் தபூம்பொ ழிற்றண் பணைசூழ்த்
தென்திருப் பேரை யில்வீற் றிருந்த
வானப் பிரான்மணி வண்ணன் கண்ணன்
செங்கனி வாயின் றிறத்த துவே

குறிப்புக்கள்:—நானம் - மயிர்முடிக் கிடும் கந்தம். எம்பெருமான் தனக்கு இஷ்ட விநியோகமாகத் தந்த கந்ததிரவியங்களைத் தன்னைப்போலவே, தன் தோழிமார்களுமெடுத்துத் தம்முடிகளில் பூசிச்சீவிக்கொண்டமையால் அம்மணமானது, இந்தப்பிராட்டி நாயகனோடு கலந்த அக் கலவையை அவன்சென்றபிறகும் ஞாபகப்படுத்துகிறதென்று சொல்கிறபடி.

கருத்து:—என் மனமோ தன்வயம்இல்லை - பகவானோடு அளவளாவியபோழ்து அவன் புன்னகையால் புதுக்கணித்த திருப்பவளத்திலே என்னெஞ்சு இராப்பகல் போய்ப் படிந்துகிடக்கும்; தோழிமார்களே! அயல்சேரிமார்களே! நான் இனிப்போகாதிருப்பதற்கெப்படிமுடியும்— என்கிறாள்.

குறிப்பு:—இப்பிராட்டி பிரிவாற்றாது பாடு படுவது அயல்சேரிகளுக்குக்கூட எட்டவே, அல்பகாரணங்கொண்டு மிதமிஞ்சி அல்லல்படவொண்ணாதென்று இவளைத் தேற்றுதலின்நிமித்தம் அயல்பெண்டிர்கள் வந்திருக்கவேண்டும். தன் மனம் பகவானின் "செங்கனிவாயின் திறத்ததுவே" என்று இந்தப்பிராட்டி விளம்புவதே ஆற்றாமை மட்டு விஞ்சிவிட்டதற்கோர் அறிகுறி.

3-ம் பாசுரம்

செங்கனி வாயின் றிறத்த தாயும்
செஞ்சுடர் நீண்முடி தாழ்ந்த தாயுஞ்
சங்கொடு சக்கரங் கண்டு கந்தும்
தாமரைக் கண்களுக் கற்றுத் தீர்ந்துந்
திங்களும் நாளும் விழாவ றாத
தென்திருப் பேரையில் வீற்றி ருந்த
நங்கள் பிரானுக்கென் னெஞ்சந் தோழீ
நாணும் நிறையு மிழந்த துவே.

அவதாரிகை:—இப்பிராட்டியின் துணைத் தோழி, "உனது நிறைக்கும் நாணுக்கும் நீ திருப்பேரைக்குச் செல்வது தகுதியன்" றென்று சொல்ல இவள் "இவைகள் என் நாயகனுடன் தொடர்ந்து அவனோடுகூடச் சென்றுவிட்டன" அவற்றின் உதவியில்லாதவளாகிய நான் எப்படிப் போகாமல் தவிர்வது? என்கிறாள்.

"பகவானின் திருப்பவளத்தினழகிலே போய்ப்படிந்தும், திருப்பவளத்தினொளி மேனோக்கிக்கொழுந்துவிட்டு வளர்ந்ததோவென்று சொல்லலாமப்படி நீண்டிருந்த திருவபிஷேகத்தின் அழகிலே தாழ்ந்தும், திருவாழியும் திருச்சங்கு மேந்தின வழகைக்கண்டு உவந்தும் மற்றொருவழகுக்கு உரித்தல்லாதபடி தாமரைக் கண்களுக்குமட்டுமே முழுவது மீடுபட்டுத் தீர்ந்தும் என்னுடைய நெஞ்சானது எப்போழ்தும் திருவிழாவின் ஆரவாரத்தில் கோஷித்தொலிக்கும் தென்திருப்பேரையில் வீற்றிருந்த நங்கள் பிரானுக்கு நாணும் நிறையு மிழந்தது"—ஆறாயிரப்படி.

ஒத்தெல்லோ

[Shakespeare's—"Othello"]

அங்கம் 1. களம் 3.

[77-வது பக்கத் தொடர்ச்சி]

[ப்ரபான்ஷியோவும், ஒத்தெல்லோவும், இயரகோவும், ராடரிகோவும், சில உத்தியோகஸ்தரும் வருகின்றனர்.]

தலைவர்:—சூர ஒத்தெல்லோ, பொதுப்பகையாம் துருக்கருக்கெதிராக நின்னை யாம் நேரே உபயோகப் படுத்தவேண்டும்— (ப்ரபான்ஷியோவைப் பார்த்து) நும்மை யான் பார்க்கவில்லை; பெரியீர், வருக; இவ்விரவு, நும்முடையயோசனையும்உதவியும் இன்றி யாம் குறைவுற்றிருந்தோம்.[1]

ப்ரபான்ஷியோ:—நுமதும் நான் அப்படியே[2]. நல்லவென் பிரபுவே, என்னைமன்னித்தருளும்[3]. என் பதவியேனும், காரியத்தைப்பற்றி நான் கேள்விப்பட்டதுயாதொன்றும் என்னைப்படுக்கையினின்று எழுப்பவில்லை[4]. பொதுக் கவலை என்னைப் பற்றிக்கொள்ளவுமில்லை. மற்று, என் தனித்துயரம், மடைவாயில் அன்ன மேற்கொள்ளும் தன்மையதாதலின், மற்றைய துன்பங்களை உட்கொண்டு விழுங்கிப் பின்னுந் தானேயா யிருக்கின்றது.[5]

தலைவர்:—விஷயம் என்ன?

ப்ரபா:—என் மகள்! ஓ, என் மகள்!

தலைவரும், சபை அங்கத்தினரும்:—இறந்துவிட்டாளா?

ப்ரபா:—ஆம், எனக்கு[6]. வசியமந்திரங்களாலும் வீம்புபேசும் வீண் வைத்தியர்களிடத்து வாங்கிய மருந்துகளாலும் அவள் வஞ்சனையுற்று, என்னின்றுகளவுபோய், கெடுக்கப்பட்டிருக்கின்றனள். மற்று, ஊனமும் குருடும் அறிவின்முடமும் அல்லாமலிருந்தும், இயற்கையானது இத்துணை விபரீதமாகத் தவறுசெய்ய, ஒட்டியம் இன்றி இயலாது.[7]

தலைவர்:—கொடிய இந்நடத்தையில், நும்மகளைத் தன்னின்றேயும், அவள்நின்று நும்மையும் இப்படி வஞ்சித்திருப்பவன் யாவனேயாயினும்[8] நீரே உமது கருத்திற்கிணங்கச் சட்டத்தின் குருதிப்புத்தகத்தை அதன் கடிய எழுத்துக்களால் படிக்கலாம்.[9] மற்று, எம் நேரிய மைந்தனே நுமது வழக்கினில் நின்றாலுமாம்[10].

ப்ரபா:— பிரபுவிற்கு என் வணக்கமுடைய வந்தனத்தைச் செலுத்துகின்றேன். இதோ இருக்கின்றான் அம்மனிதன், இந்த மூரன்; துரைத்தனக்காரியத்திற்காக நும் தனி உத்தரவு அவனை இப்பொழுதிங்குக் கொணர்ந்திருப்பதாகத் தெரிகின்றது.

தலைவரும், சென. ச. அங்கத்தினரும்:—இதன் பொருட்டு யாம் மிகவும் வருந்துகின்றோம்.

தலைவர்:—(ஒத்தெல்லோவைப் பார்த்து) இதற்கு நீ உன் திறத்தில் யாது சொல்லக்கூடும்?

ப்ரபா:—இது இப்படித்தானிருக்கின்றதென்பதன்றி வேறொன்றுமில்லை.

ஒத்தெல்லோ:—ஆற்றலும் அமைவும் ஆராதனைக்குரிய தகவும் மிக்க பெரியீர், கண்ணியம்மிக்கு அங்கீகரித்த நல்லவென் தலைவர்காள், இம்முதியவர்தம் புதல்வியை நான் அழைத்துக்கொண்டுவிட்டேனென்பது, உண்மையே; அவளையான் மணம்புரிந்துகொண்டனன், உண்மை. எனது குற்றத்தின் சிரமும் மார்பும் இவ்வளவே, இதன்மேலில்லை[11]. பேச்சில் முரடன் யான்; சமாதானத்திற்குரிய மென்மொழித் தொடரின் பாக்கியம் சிறிதேயுடையேன். மற்று, இப்பொழுது ஒன்பது திங்கள் வீண்செலவாகியவரையில், ஆண்டோரேழின் உரமதுகொண்ட என்கரங்கள் இவை தம் அருமையுடைய கருமங்களைக் கூடாரக் களத்தினில் பயின்றுவந்துள; சண்டையின் சமரின் சாகசங்களைச் சார்ந்தவைகளைக்காட்டிலும் யான் இப் பெரிய வுலகத்தைப்பற்றிப் பேசவல்லது

(1) கிறிஸ்தவர்களாயிருக்கும் எல்லாத்தேயத்தினருக்கும் துருக்கர் பகைவர்களாயிருக்கின்றார் என்னுங் குறிப்புப்பற்றி அவர்கள் இங்கு, "பொதுப்பகையாம் துருக்கர்" என்று அழைக்கப்படுகின்றனர்.

நேரே உபயோகப்படுத்தவேண்டும் = உடனேசெலுத்தவேண்டும்.

நும்மை யான் பார்க்கவில்லை - ப்ரபான்ஷியோவிற்கு முதலில் நல்வரவு கூறாமைக்குக் காரணமாக இது கூறுகின்றார்.

நும்... இருந்தோம்—இப்பொழுது யாம் சிந்தித்துக் கொண்டிருக்கும் விஷயத்தில், உம்முடைய யோசனையும் உதவியும் இல்லாமை குறையாயிருந்தது.

(2) நுமதும் நான் அப்படியே - உம்முடைய யோசனையும் உதவியும் [illegible] நானும் அப்படியே [illegible] [illegible] இப்பொழுது [illegible] யும் யோசனையும் வேண்டியிருக்கின்றது. என்பது பொருள்.

(3) துரைத்தன காரியமாக அல்லாமல் தன் சொந்தக் காரியமாக வந்திருப்பதுபற்றித் தன்னை மன்னிக்கவேண்டும், என்கின்றான்.

(4) பதவி = செனட்சபை அங்கத்தினரில் ஒருவராக இருக்கும் பதவி.

துரைத்தனகாரிய அவசரத்தை முன்னிட்டு,நான்,ஸெனட்ஸபை அங்கத்தினன் என்றமுறையில் இங்குவரவில்லை. எனக்கே நேர்ந்துள்ள ஒரு இடுக்கணைத் தீர்த்துக் கொள்ளத்தான் வந்திருக்கிறேன்—என்பதுபொருள்.

(5) மதகைத் திறந்துவிட்டால், பாய்கின்ற வெள்ளமானது, தன்முன் இருக்கின்றவைகளையெல்லாம் அடித்துக்கொண்டு, எங்கும் அவ் வெள்ளம்மாத்திரமே தென்படுவதுபோலவே, என்னுடைய தனித்துயரமும், பொதுத் துயரங்களெல்லாம் அதனில் அமிழ்ந்துபோய், தான் மாத்திரம் தலையெடுத்து நிற்கின்றது—என்பது பொருள்.

(6) ஆம், என்வரையில் அவள் இறந்ததற்கே சமானமாகிவிட்டாள்—என்பதுபொருள்.

(7) என் மகள் ஊனமற்ற அழகுடையவள்;தனக்குரிய நாயகனைப் பார்த்துத் தேர்ந்துகொள்ளுவதற்குக் கண்ணுடையவள்; அவனுடைய தகுதியை மதிக்கக்கூடிய அறிவுமுடையவள்; இன்ன இயற்கைகளை உடையவொருத்தி, தனக்கு ஒருவகையிலும்ஒவ்வாத ஒருவனை நாடினாள் என்றால்.அதனை ஏதோ அவள்செய்த தவறேயென்று கொள்வதற்கில்லை. இத்தகைய விபரீதம், வசிய மந்திரங்களால் தான் நேரக்கூடுமே யொழிய, அவள் மதியின் பிழையால் விளைந்திருக்க இயலாது. இதற்கு அவள் பொறுப்பாளி அல்லள்—என்பதுபொருள். ஒட்டியம்—வசியம் சூன்யம் முதலியவைகள் செய்கின்ற மந்திரவித்தை.

(8) இந்தக்காரியத்தில்,நும் மகளை அவள் இயற்கைக்கு மாறாக வஞ்சித்துஅபகரித்துக்கொண்டவனும், நீர் அவளை இழக்கும்படி வஞ்சித்துக் கவர்ந்துகொண்டவனும் யாராயிருப்பினும்—என்பது பொருள்.

(9) சட்டத்தின் குருதிப்புத்தகம்- குற்றம்செய்தவர்கள் அதற்குரிய தண்டனையாக இரத்தத்தைச் சிந்தும்படிசெய்யும் சட்டப்புத்தகங்கள்.

நீரே...படிக்கலாம்— சட்டப்புத்தகத்தை நீரே எழுத்தெழுத்தாகப் படித்து இந்தக் குற்றத்திற்கு எத்துணைக் கொடிய தண்டனை விதிக்க இடந்தருகிறது என்றுசொல்கின்றீரோ அந்தத் தண்டனையை விதித்துவிடுகின்றேன்—என்பதுபொருள்.

(10) நின்றாலும் ஆம்—என் மகனே இக்குற்றம் செய்திருந்தாலும் அப்படியேசெய்வேன்—என்பது பொருள்.

(11) இவர்புதல்வியைநான் அழைத்துக்கொண்டுபோய் மணம்புரிந்திருக்கின்றேன் என்பது உண்மையே. நான் செய்தது குற்றமாயின் என் குற்றமெல்லாம் அவ்வளவேயொழிய அதன்மேல் இல்லை. அதாவது,ஒருத்தியை நான் மணம்புரிந்துகொள்வது குற்றம் அன்றாகையால் நான் யாதும் குற்றம் செய்யவில்லை—என்பது பொருள்.

குற்றத்தின் சிரமும் மார்பும் இவ்வளவே— தலை ஒருவனது உயரத்திற்கும் மார்பு அகலத்திற்கும் எல்லையாவதுபோல், குற்றத்தின் சிரம் (உயரம்), மார்பு (அகலம்) இவ்வளவேயாகி அதற்குள் அடங்கியிருக்கின்றது. அதாவது, "என் குற்றத்தின் மிகுதி விரிவு எல்லாம் நான் அவளைக் கலியாணம் செய்துகொண்டேன்,என்பதற்குள் அடங்கிவிட்டது.

(12) போரில் திறமையுடையவனே யன்றி நான் நயமொழிகள் பேசும் பழக்கமோ இல்லாதவன்;ஆகையினால் இந்த வழக்கில் என் பக்ஷத்தை நான் சாமர்த்தியமாக வாதிக்க வல்லேன் அல்லேன் - என்பது இவன்கருத்து.ஒத்தெல்லோ ஏழு வருடங்கள் கடும்போர் புரிந்து ஒன்பது மாதங்களுக்கு முன்னர்த்தான் வெனிஸ்நகரம் திரும்பி வந்துளன். போர் செய்யாமற் கழிந்த இவ்வொன்பது மாதங்கள் வீண்செலவாயின,என்கின்றான்." இவ்வொன்பது மாதங்களுக்குமுன் கடந்த ஏழுவருடகாலம் என்கைகள், கூடாரங்கள் அடித்திருக்கும் போர்க்களத்தினில் அரிய போர்கள் செய்துசெய்துபலம்பெற்றிருக்கின்றன.இன்னபடி போர்த்தொழிலே வல்ல நான், அந்தப் போரிற்குரிய சாகசங்களை அறிவேனே யன்றி,இவ்வுலகின் ஏனைய விவகாரங்களைப்பற்றிப் பேசுகின்ற திறமை எனக்குச் சிறிதும் இல்லை. ஆதலால், இவ்வ[illegible] என[illegible] [illegible]க்கொள்

19?204

மிகமிகக் குறைந்ததே; ஆதலின், என்பொருட்டுப் பேசுவதில் எனது வழக்கினை நான் அலங்கரிப்பேன் அலேன் [12]. எனினும் தயையுடைய நும் பொறுமையால், காதலின் என் முழுநெறியின் மெருகற்ற வட்டமான சரிதத்தைச் செப்புவேன் [13]; எம்மருந்து எம்மந்திரம் எம்மாயம் எச்சக்தியுடைய இந்திரசாலம்—இத்தகைய நடவடிக்கைகளுக்காகவே குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றேனாதலின்—இவர் புதல்வியை அடைந்தேன் நான். [14]

ப்ரபா:—ஒருபொழுதும் துணிவில்லா ஒருகன்னி; தன் அசைவுகண்டு தானே நாணிச்சிவக்கு மவ்வளவு அமைதியும் சாந்தமும் வாய்ந்த உணர்வினள் [15]; அன்னவள், இயற்கைக்கும் வயதிற்கும் தேயத்திற்கும் நற்பெயரிற்கும் மற்று எல்லாவற்றிற்கும் மாறாக—தான் காணவே அஞ்சிக்கலங்கும் ஒன்றன்மீது காதல் கொள்ளவோ! [16]. இயற்கையின் விதிகள் அனைத்திற்கும் விரோதமாக, நிறைவானது இப்படியும் பிழைசெய்யக்கூடுமென்று ஒப்புக்கொள்கின்ற பகுத்தறிவானது முடமாகி மிக்க குறைவுடையதேயாம் [17]. ஆதலின், இதுஏன் இருக்கலாயிற்றுஎன்னற்கு, தந்திரமுடைய நரகத்தின் முறைகளைக் கண்டு பிடிக்கவே தூண்டப்படுதல்வேண்டும் [18]. ஆகையால், இரத்தத்தின்மீது சக்தியுடைய ஏதோ மருந்துகளாலோ, அல்லது, இதற்காகமந்திரித்தஏதோ ஒருமயக்க வஸ்துவாலோ, அவளை இவன் திருப்பியிருக்கின்றானென்று மீண்டும் உறுதியாகக் கூறுகின்றேன் நான்.

தலைவர்:-தற்காலத்தோற்றங்களாம்இம் மெல்லிய உடைகளும் எளிய அனுமானங்களும் இவனுக்கு விரோதமாகத் தெரிவிப்பதனினும் அகன்றதும் வெளிப்பட்டு நிற்பதும் ஆகிய சோதனை யொன்றுமின்றி, உறுதியாகக் கூறுவதே இதனை மெய்ப்பித்ததாகாது [19].

முத. சே. அங்:—மற்று, ஒத்தெல்லோ, சொல்: நெறிபிறழ்ந்த வலிய முறைகளால் இந்த இளங்கன்னியின் உணர்வினை ஒடுக்கி நஞ்சு ஊட்டினையோ; அல்லது, வேண்டி யிரந்தும், ஆன்மாவிற்கு ஆன்மா அளிக்கின்ற நேரியகேள்விகளாலும் அதுவந்துநேர்ந்ததோ? [20]

ஒத்தே:—நும்மை யான் வேண்டிக்கொள்கின்றேன். அம் மாதராளை அழைத்துவரும்படி ஸாஜிட்டரிக்கு அனுப்புங்கள். அவளே தன் தந்தையின் முன் எடுத்துரைக்கட்டும். அவள்உரையினில்என்னை நீர் தீயனாய்க் காண்பீராயின், உங்களிடத்திலிருந்து நான் கொண்டிருக்கின்ற நம்பிக்கையையும் உத்தியோகத்தையும் நீக்கிவிடுவதுமன்றி, உங்கள் தண்டனை என் உயிரின்மீதேயும் விழுவதாகுக.

னும்படி நான் நயமும் அழகுமாகப் பேசி உங்களை அங்கீகரிக்கச் செய்வது எங்ஙனம் இயலும்"—என்பதுகருத்து.

(13) ஆயினும் தயைசெய்து நீங்கள் பொறுமையுடன் கேட்பீர்களாயின்மிகையுங்குறையுமின்றிநான்நடந்ததை நடந்தபடி அனைத்தையும், சொல்லிவிடுகின்றேன்.

காதலின் முழுநெறியின் சரிதம் = என் காதல் எப்படி நடைபெற்றது என்னும் விஷயம் முழுவதும்...சொல்லுவேன்.

மெருகற்ற வட்டமான சரிதம் = பொய்யை மெய்போல் தோற்றுவிக்கும் சொல்வன்மையற்றதும், முதலிலிருந்து முடிவுவரையில் தொடர்ச்சியாயமைந்ததுமான சரிதம்.

(14) ஒத்தெல்லோவின் மனம் இப்பொழுது சிறிது அமைதியற்றிருக்குமாதலின், வாக்கியங்கள் நேர்முறையாகத் தொடரவில்லை. "எம்மருந்து......அடைந்தேன் நான்" என்னும் வாக்கியம் முன்னைய வாக்கியங்களோடு தொடர்பும் முடிவும் இல்லாமல் நிற்கின்றது. ஆயினும் அவன் கருத்தின்படி பார்க்குங்கால் - "எம்மருந்து மந்திரம் மாயம் இந்திரசாலம் அனையவைகளைக் கொண்டு இவர் புதல்வியை நான் அடைந்துளேன், என்று, என் காதலின் நெறியின் மெருகற்ற வட்டமான சரிதத்தைச் செப்புவேன்" என்று கூட்டிக்கொள்ள அமையும். "இத்தகைய நவடிக்கைகளுக்காக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறேனாகையால்" என்பது இடைப்பிறவரல். இதனால், "நான் மந்திரம் முதலியவைகள் செய்ததாகக் குற்றம் சாட்டியிருக்கிறாராதலால், நான் செய்த மந்திரம் முதலியவைகள் இன்னவைகள் என்று சொல்கிறேன்"என்கின்றான். அதாவது, "நாங்கள் கொண்ட காதலே, மந்திரம், மருந்து, மாயம், ஒட்டியம், எல்லாம் - வேறில்லை" என்பது பொருள்.

(15) அசைவு - மனோவிகாரம். தன் மனத்தில் காதல் முதலிய விகாரங்கள் தோன்றுமாயின், அதனைப் பிறரறியாவிடத்தும், தானே நாணங்கொண்டு முகம் சிவக்கும் இவளுக்கு மற்றொருவனைக் காதலித்து அவனுடன் செல்லத்தக்க துணிவு எங்கிருந்துவரும்—என்பது பொருள்.

(16) காதல் கொள்ளவோ - காதல் கொள்வாளென்று சொல்லவும் கூடுமோ,என்று வியக்கின்றவகையில்அதனை மறுக்கின்றான்.

(17) நிறைவு - பாண்பாகுபெயராக, எல்லாக் குணங்களும்நிறைந்த டெஸ்டிமோனாவைக் குறிக்கிறது. இவள், தனது இயற்கைக்குமாறாக, ஒத்தெல்லோபோன்றஒருவனைக் காதலித்திருக்கக்கூடும் என்று எவரேனும் ஒப்புக்கொண்டார்களானால்,அவர்தம் பகுத்தறிவு பழுதுபட்டுக் குறைவடைந்ததாகவே இருக்கவேண்டும்—என்பது பொருள்.

(18) பகுத்தறிவு (தோன்றாஎழுவாய்), டெஸ்டிமோனா ஒத்தெல்லோவை ஏன் பின்பற்றினாள் என்பதற்குச்சமாதானம் காணவேண்டுமானால், நரகத்தின் முறைகளாகிய மந்திரம் மாயம் முதலியவைகளாலேயே இதுநேர்ந்திருக்கும் என்னும் முடிவிற்கே வந்து தீரவேண்டும்—என்பது பொருள்.

(19) தற்காலத் தோற்றம் - சாதாரணமாக எங்கும் காணப்படுந் தோற்றம். மெல்லிய உடை - வெளிப்பார்வைக்குக்காண்கின்ற விதம். உடையானது ஒருவனுடைய உண்மையான உருவத்தை மறைத்து வேறொருவிதமாகத் தோற்றுவிப்பதுபோல், டெஸ்டிமோனாபோன்ற ஒருத்தி ஒத்தெல்லோ போன்ற ஒருவனைக் காதலிக்கமாட்டாள் என்ற இவ்வனுமானம், உண்மையை மறைத்திருக்கலாம். இவ் வனுமானங்களைக்காட்டிலும், வெளிப்படையான சாக்ஷி யொன்று மின்றி, "உறுதியாகக் கூறுகின்றேன்" என்று வற்புறுத்திக்கொண்டிருந்தால், அது அவனுடைய குற்றத்தை ரூபிப்பதற்குப் போதாது- என்பது பொருள்.

(20) உண்மையான அன்பினால் உள்ளமும் உள்ளமும் ஒன்றுபடும்படிகாதல்கூர்ந்து வினவுகின்ற வார்த்தைகள்.

வில்லிபாரதம்

துரியோதனன்—இராசராசன்.

[61-வது பக்கத் தொடர்ச்சி]

முன்காட்டியபடி அவனது அழிவுக்குக் காரணமாயிருந்த வணங்காத் தன்மை என்னும் இவ்வொரு பேதைமையைத் தவிர்த்து,மற்றைப்படி அவன் தீர்ந்த ராசதந்திரி என்பதில் சிறிதும் ஐயமில்லை. அவனது சிறந்த சொல்வன்மையைப் பார்மின்! நமது பாரதத்தில் அவனது வாக்காக அமைந்துள்ள பகுதிகள் எத்துணைச் சுவையாயிருக்கின்றன? ஆயினும், ஒரு நாடகத்தில், உலகவாழ்க்கையிற்போலல்லாமல், எல்லாப் பாத்திரங்களுந்தான் சுவையாகவே பேசலாகின்றன என்று பொதுவிதி எடுத்துக் கூறிச் செல்லவேண்டா. சுயோதனனது வாக்குகள் ஒவ்வொன்றும், இரண்டுபட்டபொருளும் தொனிக்கும்பொருளும் அமைந்துள்ளன வென்பதை அக்காப்பியம் கற்றவரே நன்கு அறிந்துகொள்ளக்கூடும். உதாரணமாக, கடோற்கசன் தூதுசென்றபோது அரசனிறுத்த மறுமொழியில்,

என்னினும்பார் தனக்குரியன் சிலைத்தொழிலில்
சிலைக்குருவாய் எவரும் போற்றும்
மன்னினுந்தான் மிகவலியன் தண்டெடுத்தால்
உந்தையிலும் வலியன் சால
உன்னினுந்தோ ளூரனுடையன் மதியாமல்
இப்படிநீ மொழிய லாமோ
தன்னினும்போர்க் கெளியனோ சயத்திரதன்
தானென்று சாற்று வாயே.

எனக் கூறியவிடத்து நேர்முகமானபுகழ்ச்சியென்ன, மறைமுகமான புகழ்ச்சியென்ன, ஆயினும் உண்மையில் தொனிக்கும் பொருளென்ன, இவையனைத்தும் கூடி எத்தகை சுவை பயக்கின்றன? அவனதுசொல்லுக்கே ஒரு தனிப்போக்குந் தோரணையும் உள. இல்லாவிடின், பகைவனை எளிதில் வசியப்படுத்துவதும் தனது அக்கிரமங்களில் மற்றோரையும் பிணிப்பதும் அவனது செவ்விய சொன்வன்மையாலன்றிப் பின் எதனாலாகும். அச்சொல்வன்மை இவனது சிறுவயதிலேயே எல்லோர்க்கும்தோன்றியதாகும். போரரங்கத்தில், கன்னன் சூதன்மகனாதலின், அருச்சுனன் அவனுடன் போரியற்றுதல் தகாதெனக் கிருபாசாரியன் உரைத்த உரையை உடனே அடித்து வீழ்த்திய பெருமை அவனதே:—

கற்றவர்க்கும் நலனிறைந்த கன்னியர்க்கும்
வண்மைகை
யுற்றவர்க்கும் வீரரேன் றுயர்ந்தவர்க்கும் *
வாழ்வுடைக்
கொற்றவர்க்கும் உண்மையான கோதில்ஞான
சரிதராம்
நற்றவர்க்கும் சாதிநன்மை தீமையென்ப
தில்லையால்.

மற்று, கடோற்கசன் தூதுசென்றபோது அவன் நிகழ்த்திய உரையைக் 'கர்ணன் மாண்பு' என்னுமக் கட்டுரையில் முன்னர் ஆராய்ந்திருக்கிறேனெனினும், அதை இன்னொருமுறைபார்ப்போம். அந்தச் சிறந்த சொற்பொழிவில் நான்கு விஷயங்கள் தோன்றுகின்றன. ஒரு அரசியல்வாதியின் சொற்பொழிவினிடை நாம் காணத்தகும் அந்தநான்கு விஷயங்களும், அலக்ஷியம், அனாயாஸம், அபரிமிதம், அர்த்தம், என்பனவே. அலக்ஷிய மென்பது, பகைவனைச் சிறிதேனும் பொருட்படுத்தாது, எத்துணைப் பெரிதாயினும் அவனதுமாண்பினை மதிப்பதின்றிப் பேசும் செருக்கான உரை. அனாயாசம் என்பது, முயற்சியில்லாமல் எதையும் ஸ்தாபிக்கக்கூடிய தனது ஆற்றலைப்பற்றிப் பேசிக்கொள்ளும் பெருமிதம்.

என்மைந்தன் இறந்திடவும் யானென்றும்
புகலாமல் இருக்கின் றேன்யான்
தன்மைந்தன் இறந்தனனும் தான்தழலில்
மூழ்குவனும் சபதம் கூறி
வின்மைந்தின் மிகுந்தவருக் கழுதிரங்கி
அரற்றுவது வீரந் தானோ?

என்பது எதையும் பொருட்படுத்தாதவொரு அலக்ஷியம். இடையில் 'வின்மைந்தின் மிகுந்தவருக்கு' என்பதி லிருவகைப்பொருளிருப்பதையும் நோக்கலாம். தன்புதல்வனுக்கென்றால் அவன் வில்லிற்சிறந்துபோரில் மாண்டது வீரப்பெருமையாம்;மற்று, பார்த்தன் மகனென்றாலோ வின்மைந்தினால் செருக்கு மிகுந்து போர்புரிவானாயின் அவன்பட்டது அவனுக்கேற்ற தண்டனையே யாம், என்று இருபொருள் வைத்துப் பேசுகின்றான். இனி,

பயத்திரவில் நடுங்கியான் பருப்பதம்புக்
கவன்கொடுத்த படையும் வாங்கி
வயத்திரத மால்கடவ வந்தெதிர்வோன்
பார்த்தனுகில் மகர மோதும்
கயத்திரவி வீழ்வதன்முன் கையறுதன்
புதல்வனைப்போல் களத்தில் மாளச்
சயத்திரதன் கொடுங்கணையால் தான்படுதல்
உறுதியெனச் சாற்று வாயே

என்பதில் பகைவனது ஆற்றல் இழிவாக வருணிக்கப்பட்டு அனாயாஸமாகக் கிடைப்பதும் கூறப்பட்டிருக்கின்றது.

என்னினும்பார் தனக்குரியன் சிலைத்தொழிலில்
சிலைக்குருவாய் எவரும் போற்றும்
மன்னினுந்தான் மிகவலியன் தண்டெடுத்தல்
உந்தையிலும் வலியன் சால
உன்னினுந்தோ ளூரனுடையன் மதியாமல்
இப்படிநீ மொழிய லாமோ
தன்னினும்போர்க் கெளியனோ சயத்திரதன்
தானென்று சாற்று வாயே.

என்பது அபரிமிதம் அல்லது அப்ரிமிதத்தின் தன்மையான கொடையாம். † அதாவது புகழை வரிசையறிந்து வழங்குதல் என்னும் அரசியலின் பெருமை. அக்கொடையில் வீமனுக்கும் கடோற்கசனுக்குமே பங்கு உண்டு. 'நமது எதிரிகளுக்கும் நமது சயத்தில்

* Oh East is East and West is West and never the twain shall meet till Earth and Heaven sit together at God's great Judgement seat, but there is neither East nor West nor border nor breed when two brave men meet though they come from the end of the Earth.—Rudyard Kipling.

† மும்முரசுகளில் ஒன்றாகிய கொடை முரசும் அரசின்ன மல்லவா? ஆனால் அக்கொடை, புலவர்க்குப் பொருளை வரையாது கொடுக்கும் வள்ளன்மை. இங்குச் சுயோதனனது கொடையோவென்னின் வீரர்களுக்கு வரிசையறிந்து வழங்கப்படும் புகழ்.

பங்குண்டு' என்று தினமும் நமது காது செவிடுபடும்படி முழக்கப்படும் தேர்தல் ஆரவாரத்தின் எதிரொலியோவிது? என்ன தாராளம்! புகழ்ச்சிக்கொடையினுல் பெருமையடைந்த அரசன் இத்துரியோதனன் ஒருவனே போலும்.

மற்றும் 'அர்த்தம்' என்பது யாதெனின், அது தான், பொருள் அல்லது அரசியல் உண்மை; பெரிய சொற்பொழிவுகளில் மின்னலைப்போன்று இடையிடையே தோன்றும் பேருண்மைகள். அப்படியே இச் சொற்பொழிவிலும் பெரியதோர் உண்மையுளது.

ஆளையா ணிலையறிவ தல்லதுமற்
றறிபவர்யார் அணிந்த போரில்
நாளையார் வெல்வரெனத் தெரியுமோ
எனநவின்று நகைத்தான் மன்னே.

என்னுமிதனில், விதியின் செயல் பலவிதம் ஆதலின் வென்றியுந்தோல்வியும்ஒருவர்பக்கமல்லஎன்று 'விதியின் செயல் அனந்தம்' எனுமுண்மையையும் சேர்த்துத் தொடுத்தான். இதைவிடச் சிறப்பாக ஒருவன் சொற்செய்தல் எவ்வாறு இயலும்? வாக்கினலேயே எல்லாவற்றையும் வென்றிகொள்ள நினைக்குமொருவன் இதைவிடச் சிறக்கப்பேசுதல்கூடுமோ? ஆயினும், இது முழுவதும் போலிச்சிறப்பு, புழுத்த அரசியல், அழுகிய புறம்போர்த்த அழுகல்பழம், என்பது ஆழ்ந்து பார்த்தால் விளங்கும். தன் மைந்தன் இறந்ததற்காக, 'ஊர் வேண்டேன் அரசுவேண்டேன், போர்வேண்டேன்' என்று போர்வீரரிடத்து எவ்வளவழுதான் காலையில் இவன். அருச்சுனனைச் சயத்திரதன் எளிதில் வெல்லுவானென்று கூறும்போதே அபிமனைக் கையறுப்பதற்காகத் தான்கொண்ட முயற்சிகள் மறந்துபோயிருக்குமா? காரியம் கைகூடிய பின்னும் அக்குரோதமாகிய நாகவிடம் அடங்காமல் பொசிகின்ற விதத்தினைப் பார்மின்.

"கையறுதன் புதல்வனைப்போல் களத்தின்மாள' என்று கூறும்போதே, எங்கு இச்சயத்திரதன் பயப்பட்டு ஓடிவிடுகின்றானோவென்று, அவனை உற்சாகமூட்டும்வண்ணம், 'என்னினும் பார்தனுக் குரியன், துரோணனிலும் வில்வல்லோன்' என்றெல்லாம் புகழ வேண்டியிருக்கின்றது. இதுவா அனுயாசம்; ஆயாசமின்றி வெற்றி சாதிக்கும் பெற்றி?

பின், சயத்திரதனுக்கும்மற்றோர்க்கும் புகழ்பங்கிடுகின்றான். ஆனால் அப்புகழில் ஒரு துளியேனும் சயத்திரதனைச் சாருமா? சாருமென்னில், மற்றை நாள் அவனை அரண்வளைத்துக் காப்பாற்றுவானேன், அவ்வரண் வைத்துக் காப்பாற்றத் துரோணன் துணையை வேண்டுவானேன்? அவனையே கிரீடிக்கு எதிர்நிற்கச் செய்யலாமல்லவா? அதுவுமல்லாமல் வழக்கமாகக் கர்ணனை யாவரினு மேம்படப் புகழ்ந்து பேசுவதற்கு மாறாக இன்று ஆசாரியனைப் பெருமைப்படுத்துவானேன்? ஆதலின் இதன் புகழ்எல்லாம் தனக்கும், சிலையாசிரியனுக்குமே யல்லவோ ஆகும்? மற்றையோர்க்காகும் புகழ் என்னே?

கடைசியாக, 'அர்த்தம்' அல்லது பொருள்: விதியின்செயலை வெல்வது அரிது என்னும் மிகச் சிறந்த பொருளை நனி விளக்கவே கூறினன். ஆனால் முயற்சியளவு பயனை எதிர்பார்க்கும் (Determinism) இச்சுயோதனனுக்கு அவ்விதியின் உண்மையில் சிறிதேனும் நம்பிக்கை யில்லையே!

இவ்வாறு இவன் போலி அரசன்; இவனது பேச்சும் போலிமகத்துவம் வாய்ந்த உரை. இதற்கெதிர் கண்ணன் சுயோதனனது சபையில் கூறிய உரையில் எத்தனை பெரிய உண்மை, (கோஹினூர் மணி போன்ற சரித்திர உண்மை) கிடக்கின்றது பார்மின். மறுபடியும் அவ்வொப்பில்லாத

தந்தை காதலுறு தன்மைகண் டினைய
தாய்ப யந்தவிரு தம்பியர்க்
கிந்த வாழ்வுமர சுங்கொடுத் தவனும்
நின்கு லத்தொருவன் இங்குளான்
முந்த மாநில மனைத்தி னுக்குமுயர்
முறைமையா னுரிய பாண்டவர்க்
கைந்து மாநகரு நீகொடா தொழியின்
என்ன தாகுமுன தரசியல்.

என்னும் பாட்டினுள்ள உண்மையே இது. இதுதான் 'அர்த்தம்' (பொருள்.)

இனித் துரியோதனன் தனது சபையோரிடத்தில் ஒழுகிக்கொண்ட முறைமையைஆராய்தல்வேண்டும். ஏனெனின் அவர்களுக்கு அவனிடமிருந்த பிரேமையும் பணிவும் எம்முயற்சியினுலும் சலிக்காதிருந்தது எளிதில் அறிந்துகொள்ளக்கூடிய விஷயமல்ல. முதலில் ஒன்று பார்ப்போம். துரியோதனனுக்கு, பாண்டவரையும்கண்ணனையும் தவிர்த்து, மற்றெங்கும்ஒரு நற்பெயரும் கௌரவமும் இருந்ததென்பதை நாம் மறக்கலாகாது. உதாரணமாக, பதினெட்டாம் நாள் சுயோதனன் வீமனுல் அடியுண்டு வீழ்ந்தபோது பலராமனுக்கு அவனிடமிருந்த பரிவுகாணக்கிடக்கிறது. தனது மைத்துனர்களின் (அத்தை மைந்தர்) பகைவனேனும், அவனிடம் பலராமன் சீற்றம்கொள்ளாததற்குக் காரணம், அவர்களது குடும்ப வழக்குக்களின் நியாய அநியாயங்களை அவரையே போன்று பிறர் உணர்தல் அரியதாவதும், மற்று, அச்சுயோதனன் ஆண்ட ஆட்சியும் அவன் இன்று வீழ்ந்த வீழ்ச்சியுமே யாவர்க்கும்பொருளாகத்தோன்றியதுமேயாம். அவ்வாறே சல்லியனும் அவனிடம் வைத்த நன்மதிப்புப் பின்வரும் நிகழ்ச்சியால் விளங்கும். பதினேழாநாள் சுயோதனன் சல்லியனைக் கண்ணபிரானுக்குத் தேர்ப்பாகனுகும்படி அவனிடம்சென்று வரங்கேட்டபோது சல்லியன்

செறுத்தவர்தம்பெருவாழ்வு-முயிரு மாற்றிச்
சேர்ந்தவர்தம் புரிந்தபெரும் தீமை எல்லாம்
பொறுத்துலக முழுதாளும் திகிரி யோயான் [யேன்.
பொருளாக வொருவரஙீபுகலுவாயேல்மறுத்துரை

என்னப் பதில் உரைத்தான். இன்னும், இவனுடன் நெருங்கி யறியாத பாஞ்சாலக் கன்னிகைகள்

ஏற்றம் தன்னில் நிகரொருவர்
இப்பே ருலகில் இலரென்னத்
தோற்றம் படைத்தோன் தனைக்காட்டித்
துரியோ தனன்மற் றிவரென்றார்.

என்று கூறுவாரெனில், துரியோதனன் பெற்றிருந்த மதிப்பைத்தெரிவிப்பதற்கு வேறு என்னவேண்டும். இனி இத்துரியோதனன் தனது சபையோர்களைஎவ்வாறு தனது அக்கிரமச் செய்கைகளுக்கெல்லாம் கூசாமல் உடன்படப் பிணித்தானென்பதை நோக்குவோம். அவர்களை அவன் பலவகையிலும் கௌரவித்து, இன்சொல் வழங்கித் தன்னிடம் பிணைக்க முயன்ற திறமை அவனைப்போன்ற ஒரு இராசதந்திரிக்கு ஏற்றதே. விதுரனுக்கு அவ்விஷயத்தில் பிணிப்பில்லை என்பது உண்மையே. வீடுமனைப் பற்றியும் கன்னனைப் பற்றியும் பின்னுல் கருதுவோம். இவர்களைத் தவிர்த்து அவன் மற்றையோரிடத்து எத்துணை இச்சகமாக நடந்துகொள்கிறானென்பதைக் கருதுவது மிக்க சுவைதரும் விஷயமாகும். உதாரணமாக, சயத்திரதனை அவனது தலையிழப்பதற்கும் வீரத்தை இழப்பதற்கும் ஏதுவான பாதகச்செயலைப் புரியத் தூண்டக்கூடியவன் இச்சுயோதனன் ஒருவனே யன்றோ. சயத்திரதனைச் சிலர் இயற்கையாகவே கொலைகாரன் என்னவே கூறக்கூடும்; நிராயுதனும் ஒருகை யிழந்தவனுமாகிய அபிமனுடன் தண்டத்தினுல் போரிட்டு அவனைக் கொன்று குவித்தது வீரமன்று என்பதும் வெளிப்படை; அது பச்சைக் கொலையே யாகும். எனினும், சயத்திரதன் சுயோதனனது மொழிகளினுல் மயங்கியே அப் போர்க்கலக்கத்தில் செய்வதின்னதெனப் புணராது அத்தகைய ஒரு பாதகச்செயலை

றினுள் என்று கொள்வதற்கிடமுண்டு. மற்றும், அவனிடமிருந்து தன்வயம் ஆக்கிக்கொண்ட சல்லியனைக் கன்னனுக்குத் தேரோட்ட இசைவிக்க எத்துணை சாகச உரைகள் பயில்கின்றான்.

...ந்தரா தலமுழுதும் மதித்த வாண்மைப்
போர்வேந்தே யுனைப்போலப் புகழே பூண்டு
...வந்தரா யமர்க்களத்தில் அதிச யித்த
வீரரான வர்க்கிதுதான் மேம்பா டன்றோ?
...ரந்தராய் எக்கலையும் வல்லோர்க் கன்றி
வாசிநெடுந் தேரூர வருமோ வென்றென்
...றந்தரா வெழுதியபொற் கொடியோன்சொல்லி
...யிறைஞ்சுதலும் உடன்பட்டான் என்செய்
...யும், [வானே.

...கோல மலரிலிருந் தனைத்து நல்கும்
...சமுகத்தோன் அறம்வளர்க்கும்செல்வப்பாவை
...கோனுக் காகமறைப் புரவி பூண்ட
...த்தடந்தேர் கடவுதனிப் பாக னானன்
...ங்கோதப் பாற்கடலோ னிவனேன்றி யாரும்
...ல்கின்ற வசுதேவன் புதல்வ னந்த
...ங்கோப விசயனுக்குச் சூத னானன்
...யனுமன் றத்தான்தேர் விரைவி லூர்ந்தான்.

...று கூறியதில், தனக்கு நம்பிக்கை யில்லாவிடினும் ...நக்கு நம்பிக்கையாதலின் அவ்விஷயத்தில் வீணுக ...ர்களது மனத்தைப் புண்படுத்தலாகாது என்று ...ன் நினைத்த அருமையை நன்கு நோக்கவேண்டும். ...வுமாய் மானுடமாய்' விளையாடும் மூர்த்தி என்று ...பியன் கண்ணனைப்பற்றி நினைப்பானெனில் அதை ...த்துரைப்பதில் பயனில்லை யென்றும் அந்நம்பிக்கையையே தனக்குப்பயன்படுத்திக்கொள்ளலாமென் ...நினைத்த அவனது நினைவைப் பாருங்கள். அதா..., தனக்கேதேனுமொன்று ஆகவேண்டியபோது ...ந்திரம்எதுவுஞ்செய்யத்துணிவனுயினும், மற்றை ...டி சபையோர்க்குத்தன்னிடமிருந்தஆதரவை எவ்...கையிலும்பெருக்கவேபாடுபடுவான் அவன். கன்ன...டத்துச் சபையோர்கள் கொண்ட அவமதிப்பைப் ...றிக் 'கர்ணன் மாண்பு' என்னும் அவ்வியாசத்தில் ...னேன். அதிலும் அசுவத்தாமன், நிரைகவர்ந்தபோது கன்னன் பார்த்தனுல் மூன்றுதரம் அடியுண்டநாள் 'நீ போருடைந் தோடுதல் போதுமோ' என்று ஏளனம் செய்ததையுங் குறிப்பிட்டேன். மற்று, அச்சபையில் சகுனியை யுள்பட, அரசனைத் தவிர்த்து, ஒருவருக்கும் அவனிடம் நன்மதிப்பில்லை என்பதை அவ்வியாசத்தில் எடுத்துரைத் திருக்கின்றேன். நிற்க, பதினேழாம் போரிலே அக்கன்னன் பார்த்தனுடன் கடைசிப்போர் புரிவதற்குச் சற்றுமுன்னுல், அசுவத்தாமன் இராசராசனிடம் சென்று, 'இன்னவாறு போர்செய்து குலத்தொடு மாண்டு எங்கு அரசியற்றுவீர்கள்? இதுவரையில் தோல்வி நின் பக்கமேயாதலான் இத்துடன் போரை நிறுத்திச் சமரசம் நிறுவுமின்' என்றான். உடனே இராசராசன் வழக்கம்போலக் கன்னனது வீரமேம்பாட்டைப் புகழ்ந்தானல்லன்; ஏனெனின்; முனிமகனுக்கு அது நகை விளைவிக்குமென்பதையறிவான் இவன். பின் அவன் உரைத்ததெல்லாம்,

ஆரியன் திருமக னிவையுரை
செயவர சனுமவை கேட்டுக்
காரியம் புகல்வது புவியாட்
சியிற்கருத் துடையவர்க் கன்றே
தூரியம் கறங்கமர் இடையுடல்
வீழச் சுரருல குயிரெய்த
வீரியம் பெறலெனக் கினிப்பய
னெனவிளம் பினன்விறல் வேலோன்.

இவ்வாறு இவன் கூறிய வார்த்தை முன் வீடுமன் இவனுக்குக் கூறிய, 'சிரங்கள்வே றுடல்கள் வேறாக் கிடப்பதே செல்வமம்மா' என்னும் மொழிகளின் எதிரொலியாகும். இவ்வாறு கூறியபின்னும் அசுவத்தாமன் தன்வார்த்தைதடைபட்டதே என்றுமுனிவு கொள்வானே என்று அவனைத் தேற்றும்வண்ணம்,

முனிமகன் புகல்கட்டுரை மறுத்து
பின்முனிவு றுவகை போருக்
கினிமை கொண்ட சொற்பல மொழிந்தான்.

இன்னபடிபிறர்மனத்தைத்தனக்கொரு பயனின்றிப் புண்படுத்தல்கூடாதென்னும்இவனதுகொள்கையை விளக்கற்கு வேறொரு அரிய உதாரணம்காட்டுவேன். எம்பெருமான் சுயோதனன் சபையில் விசுவரூபம் எடுத்தபோது, இராசராசனைத் தவிர்த்து மற்றை எல்லோரும் அவ்வுருவத்தை வணங்கினர். அப்போது இச்சுயோதனன் மாத்திரம் அஞ்சியயராது, ஆசனம் பெயராது, கைகுவியாது, தன் திடநெஞ்சைக் காட்டிக்கொண்டனனேனும் அவ் விசுவரூபம் ஒடுங்கியபோது, 'இதென்ன கரடி வித்தை' என்று வடமொழி பாரதத்திற்போல நமது பாரதத்தில் கூறினுனில்லை. அப்படிச் சுயோதனன் கூறியிருந்தால் உடனே அச்சபையோர் 'எவ்வுலகும் திருவடியின் மறைந்திட நின்றதோர் உருவத்தை கண்டும், அவ்வுருவம் இவனைக் கொல்லாது விட்டருளியதைஉணர்ந்தும், இவ்வாறு வாதுசெய்கிற நம் அரசன் ஒரு பித்தன்போலும்'' என்றே எண்ணிவிடுவராதலின் வீணுக ஒரு கெட்ட அபிப்பிராயத்தை விலைக்கு வாங்குவானேன் என்று நினைத்தான் போலும் இராசராசன். மற்று எப்படியும் அவ்வுருவத்தை வணங்கவில்லை! அதனுல் வாளாவிருந்தால்தா னென்ன? என்றுகேட்பதில் பயனில்லை. ஏனெனின் பல தர்மசங்கடமான சமயங்களில் மௌனம் ஒருபெரிய கையுதவியாம். நமக்கு விரோதமாக ஒருவர் பேசிக்கொண்டிருக்கும்போது, அவர் மொழிகளில் நமக்குச் சீற்றமும் நகையும் ஏற்படுமெனினும் அவரை உடனே மறுத்துக் கூறுவது நமக்கு ஏற்றத்தைவிளைவிக்காது இகழ்ச்சியையே பெருக்கும். ஆனுல் வாளாவிருந்தாலோ 'அதற்கென்ன, அவருடையமொழிகளுக்கும் மதிப்புண்டு' என்னும் அபிப்பிராயமே பிறரிடத்து நிலவும். அது போலவே உலகெல்லாம் அஞ்சுறு நிலையில் சிறிதும் கலங்காத அவனது முகப்பொலிவை கண்டவரெல்லோரும் 'உண்மையில் நம்மரசனும் அதிசயிக்கத் தக்கவனே' என்று உன்னுவரன்றோ? ஆதலின் ஒலிச் சிறப்பும், வருணனையும் மிக்க அவ்விசுவரூபப் பகுதியில், இவ்வொரு சிறு விஷயத்தையும் நேர்பெறவைத்த நமது கவிஞரைப் போற்றுவோம்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
குமார் 300 போலிகள் ஏமாற்றும்.
நஞ்சன்கூடு பல்பொடி
கோரோஜனை மாத்திரை
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
ஜவரேக்
காஸ்ட்ராலகஸ்
[பண்டிதர்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் ...]

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்.

சுவாமி காகாநந்தரின் ஹடயோகம்:—பாட்னாமெடிகல் காலேஜில் டாக்டர்களும் பிறரும் அடங்கிய பெரியதொரு கூட்டத்தில் சுவாமி காகாநந்தர் என்ற வங்காளி ஹடயோகப் பயிற்சிகள் சிலவற்றைச் செய்து காட்டினர். இவர் ஆணிககள் சிலவற்றை விழுங்கினர். கண்ணடி டம்ளரை உடைத்துச் சாப்பிட்டார். அக்னித் திராவகத்தைச்சாப்பிட்டார். 7 அடி உயரத்திலிருந்து கண்ணடித்துண்டுகள் அடங்கிய ஒரு தொட்டியில் குதித்தார் எக்ஸ்ரே பரிசோதனை செய்தபோது இவர் வயிற்றின் ஒரு பாகத்தில் இவர் விழுங்கிய ஆணிகள் பலவுமிருந்தன. ஒரு குழியில் இறங்கி இவர் அதனுள் காற்று ஓட்டம் சற்றுமில்லாதிருந்தும் அது மூடப்பட்டிருந்தும் ஒருமணி நேரம் அங்கேயேதங்கியிருந்தார்.

நட்பின் சிறப்பு:—ஆஸ்திரியாவைச் சேர்ந்த இன்ஸ்பர்க் என்ற இடத்தில் ஆண்டன் ஹாப்ட் என்பவரும் அவருடைய உயிர்த்தோழரும் ஒரு சாராயக் கிடங்கில் வேலை செய்து வந்தனர். ஹாப்ட் மணமாகாதவர். அவருடைய சிநேகிதருக்கோ மூன்று குழந்தைகள் இருந்தன. கிடங்கில் சிக்கனம் காரணமாக ஹாப்டின் சிநேகிதரை வேலையிலிருந்து நீக்கிவிட்டனர். ஹாப்டிற்குத் தனது சிநேகிதருக்கு வேலை போனது மிகவும் மனக்கஷ்டமாயிருந்தது. கிடங்கின் மானேஜரைத் தன்னைச் சுட்டுக் கொன்றுவிட்டு சிநேகிதருக்கு வேலை கொடுக்கும்படி வேண்டினர். மானேஜர் கேட்கவில்லை. பிறகு ஹாம்ட் தன்னைச் சுட்டுக் கொள்ள முயன்றதில் ஒரு கண் குருடாய் விட்டது. நண்பனுக்கு வேலையுங்கிடைத்தது.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., Managers.

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.
Please apply for particulars to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., Managers.

இண்டோ-கம்மர்ஷியல்
பாங்க், லிமிடெட்.
மாயவரம்
சென்னை ஆபீஸ், 107. அரண்மனைக்காரத் தெரு,
பஜார் பிராஞ்சு, 260. சைனபஜார் ரோட்,
மதுரை, காரைக்குடி, விருதுநகர்,
கும்பகோணம், திருவாரூர்,
ஈரோடு, தூத்துக்குடி,
விஜயநகரம்,
புதுக்கோட்டை,
திருநெல்வேலி.
சப்-ஆபீஸ்
சீர்காழி & சிதம்பரம்
எல்லா வகையான பாங்கி அலுவல்களும் ஏற்றுக்கொள்ளப்படும். நிபந்தனைகள் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.
S. N. N. சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்,
107. அரண்மனைக்கார தெரு, ஜி, டி. மதறாஸ்.

சிறந்த பலவிருத்தி ஔஷதம்
சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்
மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் காஸ்தமாகக் கண்டிக்கும்.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1
இனும்! "காம சாஸ்திரம்" இனும்!!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.
ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ல ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷுயரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.
யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்தஇன்வெஸ்ட்மெண்டும்,வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.
யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னால் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்டமுடையதும் ஆன கம்பனி.
ஹெட் ஆபீஸ்:— செம்புதாஸ் தெரு, சென்னை } அல்லது { இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்
இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

Printed at the B. N. Press, Mount Road, and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)